E Paper

REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA

www.thinakaran.lk

/ Thinakaran.lk / ThinakaranLK

மின்னிதழ்

2023 மே 13 சனிக்கிழமை

# தினகரன்


THINAKARAN

තිනකරන්

வரு. 91 இல. 112 | Saturday 13, May, 2023 | 10 பக்கங்கள் | 50/-

## இலங்கை ரூபாவின் பெறுமதி அதிகரிப்பு

### டொலரொன்று 320,03ஆக விற்பனை



அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாவின் பெறுமதி மேலும் அதிகரித்துள்ளது. இந்நிலையில், இலங்கை மத்திய வங்கி நேற்று (12) வெளியிட்டுள்ள நாணய மாற்று விகிதத்தின்படி, அமெரிக்க 06



'வாழ்க்கைக்கு திறன், திறனுக்கு தொழில்' என்ற தொனிப்பொருளின் கீழ் பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றுவரும் Sri Lanka Skills Expo 2023 கண்காட்சியை பார்வையிட்ட ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, கண்காட்சியை பார்வையிட வந்த மாணவர்களுடன் கலந்துரையாடினார்.

## அரசின் நலன்புரி கொடுப்பனவுகள் தோட்டத் தொழிலாளருக்கும் கிடைக்கும்



### அமைச்சர் ஜீவன் தொண்டமான் தெரிவிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**

அரசாங்கத்தினால் வழங்கப்படும் நலன்புரி கொடுப்பனவுகள் முறையாக தோட்டத் தொழிலாளர்களுக்கும் கிடைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக, அமைச்சர் ஜீவன் தொண்டமான் தெரிவித்தார்.

தோட்டப்புற மக்கள் வீண் வதந்திகளை நம்பக்கூடாதென்றும் இதுவரை 06

குறைந்த வருமானமுள்ள 22 இலட்சம் குடும்பங்களுக்கு

## அரசின் நலன்புரி கொடுப்பனவுகள் அடுத்த மாதம் வழங்க நடவடிக்கை

### 37 இலட்சம் விண்ணப்பங்களில் 22 இலட்சம் விண்ணப்பங்கள் தெரிவு



**லோரன்ஸ் செல்வநாயகம்**

குறைந்த வருமானம் கொண்ட 22 இலட்சம் குடும்பங்களுக்கு அரசாங்கம் அடுத்த மாதம் முதல் நலன்புரி கொடுப்பனவுகளை வழங்க தீர்மானித்துள்ளதாக, நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்தார்.

இத்திட்டத்துக்காக கிடைக்கப் பெற்றுள்ள 37 இலட்சம் விண்ணப்பங்களில் 33 இலட்சம் விண்ணப்பங்கள் மீள்பரிசீலனை செய்யப்பட்டு முழுமையான 06

# அடுத்த பத்து வருடங்களில் நவீனமயமாகும் கல்வித்துறை



### தன்னிறைவான திறனைக் கொண்ட மாணவ சமுதாயத்தை கட்டியெழுப்புவதே நோக்கம் என்கிறார் ஜனாதிபதி

**சில அரச நிறுவனங்களுக்காக செலவிட்ட பணத்தை கல்விக்கு செலவிட்டிருந்தால், ஆசியாவின் சிறந்த கல்வித்துறை இலங்கை வசமாகியிருக்குமெனவும் தெரிவிப்பு**

அடுத்த பத்து வருடங்களில் கல்வித்துறையை நவீன மயப்படுத்தி தன்னிறைவான திறன்களை கொண்ட மாணவச் சமூகம் ஒன்றை கட்டியெழுப்புவதாக, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உறுதியளித்தார்.

கல்வித்துறையை நவீன மயப்படுத்துவதற்கான அமைச்சரவை குழுவும் நியமிக்கப்பட்டுள்ள நிலையில் மறுசீரமைப்புச் செயற்பாடுகள் விரைவில் முன்னெடுக்கப்படுமென்றும், ஜனாதிபதி தெரிவித்தார்.

கடந்த பத்து வருடங்களில் சில அரச நிறுவனங்களுக்காக செலவிட்ட பணத்தை கல்விக்காக செலவிட்டிருந்தால், ஆசியாவின் மிகச் சிறந்த கல்வித்துறை இலங்கை வசமாகியிருக்கும் எனவும், ஜனாதிபதி வலியுறுத்தினார்.

திறன் மற்றும் தொழில் கண்காட்சியான'skills Expo 2023' நிகழ்வில் நேற்று (12) கலந்துகொண்டு உரையாற்றிய போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

'வாழ்க்கைக்கு திறன் திறனுக்கு தொழில்' என்ற தொனிப்பொருளின் கீழ் பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றுவரும் மேற்படி கண்காட்சி, இம்மாதம் 12ஆம் 13ஆம் மற்றும் 14ஆம் திகதிகளில் காலை 9.00 மணிமுதல் இரவு 8.00 மணிவரையில் நடைபெறுகிறது. 06

## அரசின் வருவாய், செலவினங்கள் தொடர்பான விபரம் பாராளுமன்றுக்கு

### மாதாந்தம் சமர்ப்பிக்க அமைச்சர் பந்துல யோசனை முன்வைப்பு



**லோரன்ஸ் செல்வநாயகம்**

அரசாங்கம் மாதாந்தம் பெற்றுக்கொள்ளும் வருமானம் மற்றும் செலவினங்கள் தொடர்பில் மாத இறுதியில் அனைத்து பாராளுமன்ற உறுப்பினர்களும் அறிந்து கொள்ளும் வகையில் பாராளுமன்றத்தில் அதனை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு தாம் நிதி இராஜாங்க அமைச்சருக்கு யோசனையொன்றை முன்வைப்பதாக, அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.

அதன் மூலம் அரசாங்கத்துக்கு மாதாந்தம் கிடைக்கும் வருமானம் 06

## பாடசாலைகளுக்கு மே 27 முதல் ஜூன் 11 வரை விடுமுறை

### கல்வி அமைச்சு அறிவிப்பு




பாடசாலைகளுக்கு இம்மாதம் 27ஆம் திகதி முதல் ஜூன் மாதம் 11ஆம் திகதி வரையில் விடுமுறை வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளதாக, கல்வி இராஜாங்க அமைச்சர் அ.அரவிந்தகுமார் தெரிவித்துள்ளார். கல்வி அமைச்சில் இத்தீர்மானம் எடுக்கப்பட்டதாக கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

பாடசாலைகளுக்கு இன்று 13ஆம் திகதி முதல் 24ஆம் திகதி வரையில் விடுமுறை வழங்கப்படுமென முன்னதாக அறிவிக்கப்பட்டிருந்தது. இக்காலப்பகுதியில் நடைபெறவிருந்த கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் 06

## தமிழ் அரசியல் கைதிகளை விடுவிக்க சட்ட நடவடிக்கை எடுக்கச் சம்மதம்

### ஜனாதிபதியுடனான சந்திப்பு குறித்து CV விக்கினேஸ்வரன் தெரிவிப்பு



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடனான சந்திப்பு பெரிதாக நன்மை பயக்காவிட்டாலும், சில விடயங்கள் ஆறுதல் தரும் விதத்தில் அமைந்ததாக, பாராளுமன்ற உறுப்பினர் சி.வி.விக்கினேஸ்வரன் தெரிவித்தார்.

தமிழ் கட்சிகளுக்கும் ஜனாதிபதிக்குமிடையிலான சந்திப்பு நேற்று முன்தினம் (11) மாலை ஜனாதிபதி இல்லத்தில் நடைபெற்றது. இது தொடர்பாக கருத்துத் தெரிவித்த போதே, அவர் இவ்வாறு தெரிவித்தார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்த போது, 06

கம்பளையில் பதற்றமான சூழல்;

## காணாமல் போன யுவதி சடலமாக மீட்பு!

### கொன்று புதைத்ததாக சந்தேகநபர் வாக்குமூலம்



கம்பளை பிரதேசத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை காணாமல் போன யுவதியைக் கடத்தி தான் கொலை செய்ததாக சந்தேகநபர் வாக்குமூலமளித்துள்ளதாக, பொலிஸ் ஊடகப் 06

## A/L விடைத்தாள் மதிப்பீடுகள் அடுத்த மாதத்துக்குள் நிறைவு

### பரீட்சைகள் திணைக்களம் திட்டமிட்டுள்ளதாக தெரிவிப்பு

கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சை விடைத்தாள் மதிப்பீட்டுப் பணிகளை அடுத்த மாதத்துக்குள் நிறைவு செய்யத் திட்டமிட்டுள்ளதாக, பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இரண்டு பாடங்களுக்கான பரீட்சை விடைத்தாள் மதிப்பீட்டுப் பணிகள் தற்போது நிறைவடைந்துள்ளதாக, பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தர தெரிவித்தார். 06

Department of Examinations - Sri Lanka

## இலங்கைக்கு கடத்தவிருந்த 200Kg கஞ்சா தூத்துக்குடியில் பறிமுதல்

### மதுரை மாநகர பொலிஸார் அதிரடி நடவடிக்கை



**மன்னார் தினகரன் நிருபர்**

தூத்துக்குடி மாவட்டம் சாத்தான்குளம் அருகே ஆந்திராவிலிருந்து கடந்த செவ்வாய்க்கிழமை இரவு முதல் கடத்தி வரப்பட்ட 2,090 கிலோகிராம் கஞ்சாவை மதுரை நகர பொலிஸார் பறிமுதல் செய்துள்ளனர். இந்தக் கஞ்சா இலங்கைக்கு கடத்தப்படவிருந்ததாக தெரிவித்த பொலிஸார், அடையாளம் 06

## சீமெந்து விலைகள் அடுத்த வாரம் குறையும்

### சீமெந்து உற்பத்தியாளர்கள் எதிர்வுகூறல்



சீமெந்தின் விலை அடுத்த வாரம் முதல் குறைக்கப்படவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. இந்நிலையில், அடுத்த வாரம் சீமெந்து மூடையொன்றின் விலையை குறிப்பிடத்தக்களவில் குறைக்க எதிர்பார்ப்பதாக, சீமெந்து உற்பத்தியாளர்கள் தெரிவித்தனர். தற்போது சந்தையில் சீமெந்து மூடையொன்று 2,750 ரூபாவுக்கு 06

## Mocha சூறாவளியின் தாக்கம்; அதிக மழை வீழ்ச்சிக்கு வாய்ப்பு

### வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வுகூறுகிறது



வங்காள விரிகுடாவின் மத்திய பகுதியில் நிலவும் Mocha சூறாவளியின் தாக்கத்தால், நாட்டில் அதிக மழை வீழ்ச்சி பதிவாகக்கூடுமென, வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது.

மத்திய, வடமேல் மற்றும் தென் மாகாணங்களில் பலத்த மழை 06

## எயார் சைனா விமான சேவை ஜூலை முதல்

### இலங்கைக்கான சேவைகள் ஆரம்பமாகிறது




சீனாவின் விமான சேவை நிறுவனமான எயார் சைனா, எதிர்வரும் ஜூலை மாதம் முதல் இலங்கைக்கான தனது சேவையை ஆரம்பிக்குமென, சுற்றுலாத்துறை அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ தெரிவித்தார். ஏயார் சைனா ஆரம்பத்தில் வாரத்துக்கு மூன்று 06

உடதியலும நீர்வீழ்ச்சி பகுதியில்

## யானை தாக்கியதில் யுவதி ஸ்தலத்தில் பலி!

### இளைஞர் படுகாயமடைந்தார்



**லுணுகல, ஊவா சுழற்சி நிருபர்கள்**

மக்கள்தெனிய கொஸ்லாந்தை, உடதியலும பிரதேசத்திலுள்ள நீர்வீழ்ச்சியை அண்டிய இடத்தில் தற்காலிகக் கூடாரம் அமைத்து தங்கியிருந்த 06

## குருநாகல் வைத்தியசாலை வைத்தியர்கள் மீது தாக்குதல்!

### சந்தேகநபர் தம்புள்ளையில் கைது!




குருநாகல் வைத்தியசாலையில் வைத்தியர்களை தாக்கிய சம்பவம் தொடர்பாக சந்தேகத்தின் பேரில் ஒருவரை நேற்று முன்தினம் (11) பொலிஸார் கைது செய்துள்ளனர்.

மாத்தளை பிரதேசத்தை சேர்ந்த 24 வயதுடைய ஒருவரையே பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கடந்த 8ஆம் திகதி குருநாகல் வைத்தியசாலையில் கடமையாற்றும் பெண் வைத்தியர் மற்றும் ஆண் 06

அகதி ஒருவரை கொலை செய்த குற்றச்சாட்டு;

## லண்டனில் இலங்கை தமிழ் இளைஞருக்கு ஆயுள் தண்டனை



மேற்கு லண்டனில் ஆப்கானிஸ்தான் அகதியொருவர் கொடூரமாகத் தாக்கப்பட்டு கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பாக இலங்கையர் உட்பட இருவருக்கு ஆயுள் தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் கடந்த 2021ஆம் ஆண்டு நவம்பர் 24ஆம் திகதி மேற்கு லண்டனில் சவுத்ஹாலிலுள்ள 06

## மாத்தறையில் இந்திய முட்டைகள் பல மீட்பு

### வர்த்தக நிலையமொன்றிலிருந்து கைப்பற்றல்



இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட ஒரு தொகை முட்டைகள் மாத்தறை, வெல்கம பிரதேசத்திலுள்ள வர்த்தக நிலையமொன்றிலிருந்து மீட்கப்பட்டுள்ளன.

நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபைக்கு கிடைத்த தகவலுக்கமைய அதிகாரிகள் மற்றும் சுகாதாரப் பிரிவின் உணவுக் கட்டுப்பாட்டுப் பிரிவு அதிகாரிகள் இதற்கான நடவடிக்கையை எடுத்ததுடன், இது தொடர்பாக கால்நடை 06

# சர்வதேச செய்திகள்

## உலக சுகாதார அவசரநிலை: குரங்கம்மை தொற்று நீக்கம்



எம்பொக்ஸ் என பெயர் மாற்றம் செய்யப்பட்ட குரங்கம்மை நோயை உலக சுகாதார அவசர நிலையில் இருந்து உலக சுகாதார அமைப்பு நீக்கியுள்ளது.

உலகெங்கும் இந்த நோய் சம்பவங்கள் மிக வேகமாகக் குறைந்து வருவதன் காரணமாக இந்த முடிவு எடுக்கப்பட்டதாக உலக சுகாதார அமைப்பின் தலைவர் டெட்ரோஸ் அதனொம் கெப்ரியேசுஸ் தெரிவித்துள்ளார். எனினும் இந்த நோய் தொடர்ந்து அச்சுறுத்தல் கொண்டதாக இருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார். குறிப்பாக ஆபிரிக்க பிராந்தியத்தில் இந்த நோய் ஆபத்தானதாக இருந்து வருகிறது.

கொவிட் பெருந்தொற்றை சர்வதேச அக்கறைக்குரிய பொது சுகாதார அவசர நிலையில் இருந்து ஐ.நா நிறுவனம் நீக்கி ஒரு வாரத்தின் பின்னரே இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளது.

"என்றாலும், கொவிட்–19 போன்றே பணி முடிந்ததாக இதன் மூலம் அர்த்தம் கொள்ள முடியாது" என்று கெப்ரியேசுஸ் தெரிவித்தார்.

மத்திய மற்றும் மேற்கு ஆபிரிக்காவின் சில நாடுகளில் உள்ளூர் நோய்த் தொற்றாக பல தசாப்தங்கள் பாதிப்பை ஏற்படுத்தி வரும் எம்பொக்ஸ், கடந்த ஆண்டு மே மாதம் ஐரோப்பா, வட அமெரிக்கா மற்றும் உலகின் வேறு பகுதிகளிலும் பரவ ஆரம்பித்தது. இது ஆண்களுடன் உறவுகொள்ளும் ஆண்களிடையேயே பெரும்பாலும் பரவுகிறது.

கடந்த ஆண்டு 100க்கும் மேற்பட்ட நாடுகளில் எம்பொக்ஸ் அடையாளம் காணப்பட்டது. 87ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் பாதிக்கப்பட்டனர்; 140 பேர் குரங்கம்மையால் உயிரிழந்தனர்.

## மே 18இல் காலாவதியாகும் உக்ரைன் – ரஷ்ய ஒப்பந்தம்

### உலகுக்கு உணவளிப்பதில் நெருக்கடி




உக்ரைன் தானிய ஒப்பந்தத்தில் இருந்து ரஷ்யா விலகினால் உலகுக்கு உணவு அளிப்பது கடினமாக இருக்கும் என்று உலக உணவுத் திட்ட தலைவர் சின்டி மெக்கைன் எச்சரித்துள்ளார்.

வரும் மே 18 ஆம் திகதி இந்த உடன்படிக்கை காலவதியாகவிருக்கும் நிலையில் அது புதுப்பிக்கப்பட வேண்டும் என்று பி.பி.சி தொலைக்காட்சி நிகழ்ச்சி ஒன்றில் பங்கேற்ற மெக்கைன் குறிப்பிட்டுள்ளார்.

உக்ரைன் போருக்கு மத்தியில் அந்நாட்டில் இருந்து மில்லியன் தொன் உணவுப் பொருட்களை ஏற்றுமதி செய்ய அனுமதிப்பதாக இந்த உடன்படிக்கை உள்ளது. ஐ.நா மற்றும் துருக்கியின் மத்தியஸ்தத்தில் கடந்த ஜூலை மாதமே இந்த உடன்படிக்கை எட்டப்பட்டது.

2022 பெப்ரவரியில் உக்ரைன் மீது ரஷ்யா படையெடுத்ததை அடுத்து ரஷ்ய போர் விமானங்கள் கறுங்கடலில் உக்ரைனிய துறைமுகங்களை அடைவது முடக்கப்பட்டது. இதனை அடுத்து சர்வதேச அளவில் உணவு பிரச்சினை ஒன்று ஏற்பட்டது.

உக்ரைன் உலகின் பிரதான சூரிய காந்தி, சோளம், கோதுமை மற்றும் பார்லி ஏற்றுமதி நாடாக இருப்பதோடு உலக உணவுத் திட்டத்தினால் கடந்த ஆண்டு பெறப்பட்ட பாதிக்கும் அதிகமான கோதுமைத் தானியம் உக்ரைனில் இருந்து வந்ததாகும்.

## இஸ்ரேல் தாக்குதல்கள் நீடிப்பு: காசாவில் பலி 30ஆக உயர்வு



காசா மீது இஸ்ரேல் கடந்த செவ்வாய்க்கிழமை (09) தொடக்கம் நடத்தி வரும் வான் தாக்குதல்களில் கொல்லப்பட்ட பலஸ்தீனர்கள் எண்ணிக்கை 30ஆக அதிகரித்திருப்பதோடு 90க்கும் அதிகமானவர்கள் காயமடைந்திருப்பதாக பலஸ்தீன சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

கொல்லப்பட்டவர்களில் ஆறு சிறுவர்கள் மற்றும் மூன்று பெண்களுடன் பலஸ்தீன இஸ்லாமிய ஜிஹாத் அமைப்பின் ரொக்கெட் படை தளபதி மற்றும் பிரதித் தலைவர் ஆகியோர் அடங்குகின்றனர்.

மறுபுறம் காசாவில் இருந்து இஸ்ரேலை நோக்கி பலஸ்தீன தரப்புகள் தொடர்ந்து ரொக்கெட் தாக்குதல்களை நடத்தி வரும் நிலையில் இந்தத் தாக்குதலில் கடந்த வியாழனன்று (11) இஸ்ரேலியர் ஒருவர் கொல்லப்பட்டார்.

எகிப்தின் மத்தியஸ்த முயற்சிகளுக்கு மத்தியிலும் மோதல் தீவிரம் அடைந்திருப்பதோடு அந்த மோதல் நேற்று நான்காவது நாளை எட்டியது.

"தற்காப்பு மற்றும் தாக்குதல் என்ற இரண்டிலும் நாம் உச்ச நடவடிக்கையை மேற்கொண்டிருக்கிறோம்" என்று இஸ்ரேல் பிரதமர் பென்ஜமின் நெதன்யாகு வீடியோ பதிவு மூலம் வெளியிட்ட அறிவிப்பில் குறிப்பிட்டுள்ளார். "யார் எமக்கு தீங்கு செய்ய வந்தாலும் அவரது இரத்தம் பறிக்கப்படும்" என்றும் நெதன்யாகு எச்சரித்தார்.

பலஸ்தீன இஸ்லாமிய ஜிஹாத் அமைப்பின் ரொக்கெட் படை தலைவர் அலி காலி மற்றும் பிரதித் தலைவர் அஹமது அபூ டக்கா உடன் அந்த அமைப்பின் ஐந்து முக்கிய புள்ளிக்கள் இஸ்ரேலிய தாக்குதல்களில் கொல்லப்பட்டுள்ளனர்.

போர் நிறுத்தம் ஒன்றுக்கு முயற்சிப்பதாக குறிப்பிட்டிருக்கும் எகிப்து, இதுவரை அந்த முயற்சி பயனற்றது என்றே நிரூபிக்கப்பட்டிருப்பதாக தெரிவித்துள்ளது. இந்த போர் நிறுத்த நிபந்தனையில் தமது தளபதிகள் படுகொலை செய்யப்படுவது நிறுத்தப்பட வேண்டும் என்று பலஸ்தீன இஸ்லாமிய ஜிஹாத் அமைப்பு குறிப்பிட்டுள்ளது.

எனினும் ரொக்கெட்டுகள் மற்றும் தளபதிகள் இன்றி அந்தப் போராட்ட அமைப்பு தானாக தாக்குதல்களை நிறுத்தும் என்று இஸ்ரேல் நம்புகிறது.

இஸ்ரேல் இதுவரை நடத்திய தாக்குதல்களில் ஐந்து கட்டடங்கள் தரைமட்டமாக்கப்பட்டிருப்பதாகவும் 300க்கும் அதிகமான தொடர்மாடி கட்டடங்கள் சேதமடைந்திருப்பதாகவும் காசாவில் ஆட்சியில் உள்ள ஹமாஸ் அமைப்பின் ஊடக அலுவலகத் தலைவர் சலாமா மாரூப் தெரிவித்துள்ளார்.

இஸ்ரேல் செவ்வாய்க்கிழமை தொடக்கம் எல்லையைத் தாண்டி செல்லும் பொருட்கள் மற்றும் மக்கள் நடமாட்டத்தை மூடி இருப்பதாகவும் அவசர மனிதாபிமான தேவைகளுக்குக் கூட பயணத்தை முற்றாக முடக்கி இருப்பதோடு காசாவில் கிடைக்கப்பெறாத மருத்துவ சிகிச்சைகளை பெறுவதில் இருந்தும் நோயாளிகள் தடுக்கப்பட்டிருப்பதாகவும் மனித உரிமைக் குழுக்கள் தெரிவித்துள்ளன.

காசாவில் கிடைக்கப்பெறாத மருத்துவ சிகிச்சைகளை பெறுவதில் இருந்து சுமார் 292 நோயாளர்கள் மற்றும் நிறுவனங்கள் தடுக்கப்பட்டுள்ளனர். இவர்களில் பெரும்பாலானவர்கள் புற்று நோயாளர்கள் என்பதோடு மற்றவர்கள் மேற்குக் கரை அல்லது இஸ்ரேல் மருத்துவமனைகளால் வழங்கப்படும் உயிர் காக்கும் சிகிச்சைகள் தேவைப்படுபவர்கள் என்று இஸ்ரேலிய உரிமைக் குழுவான கிஷா தெரிவித்துள்ளது.

## அமெரிக்காவில் எல்லை கட்டுப்பாடுகள் காலாவதி



அமெரிக்காவில் நோய்ப்பரவல் காலத்தின் சர்ச்சைக்குரிய எல்லைக் கட்டுப்பாடு நேற்று (12) காலாவதியானது.

'டைட்ல் போர்டி டூ' என்று அது அழைக்கப்படுகிறது. அமெரிக்க எல்லையை அடையும் குடியேறிகளைப் பொதுச் சுகாதாரக் காரணங்களுக்காக அதிகாரிகள் உடனே வெளியேற்ற அந்தக் கட்டுப்பாடு அனுமதிக்கிறது.

அமெரிக்காவில் கொவிட்–19 பொதுச் சுகாதார நெருக்கடி நிலை முடிவுக்குவருவதால் அந்தக் கட்டுப்பாடு காலவதியானது. எனவே தென் எல்லையில் குழப்பம் ஏற்படலாம் என்று குடியரசுக் கட்சியினர் கூறுகின்றனர்.

அடைக்கலம் நாடுவோர் எண்ணிக்கை அதிகரிப்பதைக் கையாளத் தயாராயிருப்பதாக பைடன் நிர்வாகம் தெரிவித்துள்ளது.

## எல்லை பிரச்சினை குறித்து இந்தியாவும் சீனாவும் பேச்சு



எல்லைப் பிரதேசங்களில் நிலவும் அசாதாரண நிலைமைகள் குறித்து இந்தியாவும் சீனாவும் கலந்துரையாடியுள்ளன. இந்திய வெளிவிவகார அமைச்சர் கலாநிதி எஸ். ஜெய்சங்கருக்கும் சீன வெளிவிவகார அமைச்சர் கின் கேங்வுக்கும் இடையில் இப்பேச்சுவார்த்தை இடம்பெற்றுள்ளது.

ஷங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் வெளிவிவகார அமைச்சர்கள் மாநாட்டில் கலந்து கொள்ள இந்தியாவுக்கு விஜயம் செய்திருந்த சீன வெளிவிவகார அமைச்சருடன் இப்பேச்சுவார்த்தை நடைபெற்றுள்ளது.

"சீன மற்றும் இந்திய எல்லைப் பகுதிகளில் நிலவும் அசாதாரண நிலைமைகள் குறித்து நாம் வெளிப்படையாகக் கலந்துரையாடியுள்ளோம். இங்கு விலகல் செயன்முறையை நாம் முன்நோக்கிக் கொண்டு செல்ல வேண்டும். இரு நாடுகளுக்கும் இடையிலான நட்புறவில் எல்லைப் பகுதிகளின் அமைதி முக்கிய இடத்தைப் பெற்றுள்ளது. இது தொடர்பில் எமது நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்தியுள்ளோம்" என்று இந்த சந்திப்புக்குப் பின்னர் செய்தியாளர்களை சந்தித்த ஜெய்சங்கர் தெரிவித்தார்.

## இதுவரையில் காணாத பாரிய அண்ட வெடிப்பு அவதானிப்பு



அண்டத்தில் இதுவரை அவதானிக்கப்பட்ட மிகப்பெரிய வெடிப்பை அடையாளம் கண்டதாக வானியலாளர்கள் தெரிவித்துள்ளனர். நமது சூரிய குடும்பத்தை விட 100 மடங்கு அளவுள்ள ஒரு தீப்பந்தம், மூன்று ஆண்டுகளுக்கு முன் தொலைதூரப் பிரபஞ்சத்தில் திடீரென எரிய ஆரம்பித்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது.

இது பெரும்பாலும் ஒரு வெடிப்பாக இருக்கும் என்று விளக்கியுள்ள வானியலாளர்கள் இந்த புதிர்மிக்க நிகழ்வை புரிந்துகொண்ட மேலும் ஆய்வுகள் தேவைப்படுவதாகவும் தெரிவித்துள்ளனர்.

AT2021lwx என்ற இந்த வெடிப்பு மூன்று ஆண்டுகளுக்கு மேலாக நீடிப்பதோடு பெரும்பாலான சுப்பர் நோவாக்களுடன் ஒப்பிடுகையில் அந்த வெடிப்புகள் சில மாதங்களே ஒளிர்வதாக இருக்கும் என்று ரோயல் வானியலாளர் சமூகத்தின் மாதாந்த அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

வெடிப்பு என்பது ஒரு இராட்சத வாயு மேகத்தின் விளைவாகும் என்றும் இது நமது சூரியனை விட ஆயிரக்கணக்கான மடங்கு பெரியது என்றும் இது ஒரு மிகப் பெரிய கருந்துளையால் சீர்குலைந்திருப்பதாகவும் சௌதம்டன் பல்கலையை தலைமையாகக் கொண்டு வானியலாளர்கள் நம்புகின்றனர்.

இது தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வின்படி இந்த வெடிப்பு பார்ப்பதற்கு பிரபஞ்சம் சுமார் 6 பில்லியன் வயதாக இருக்கும்போது சுமார் 8 பில்லியன் ஒலியாண்டுகளுக்கு அப்பால் நிகழ்ந்திருப்பதாகவும், தொலைநோக்கி வலைப்பின்னல் மூலம் தொடர்ந்தும் அவதானிக்க முடிவதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

## ட்விட்டருக்கு புதிய தலைவர்



ட்விட்டருக்கு புதிய தலைமை நிர்வாக அதிகாரி ஒருவரை தேடும் பணி முடிவுக்கு வந்திருப்பதாக அந்த சமூக ஊடகத்தின் உரிமையாளர் எலொன் மஸ்க் அறிவித்துள்ளார்.

ட்விட்டரில் கடந்த வியாழக்கிழமை (11) அவர் இட்ட பதிவில், கிட்டத்தட்ட ஆறு வாரங்களில் பெண் ஒருவர் அந்தப் பதவியை ஏற்பார் என்று தெரிவித்துள்ளார். நிர்வாகத் தலைவர் மற்றும் தலைமை தொழில்நுட்ப அதிகாரி பதவிகளும் மாற்றப்படுவதாக மஸ்க் அதில் குறிப்பிட்டுள்ளார்.

புதிய பதவிக்கு நியமிக்கப்பட்டவர் பற்றிய விபரத்தை மஸ்க் வெளியிடவில்லை. எனினும் இந்தப் பதவிக்கு என்.பி.சி யுனிவர்சல் நிறுவனத்தின் விளம்பரப்பிரிவு தலைவி லிண்டா யக்கரினோவுடன் பேச்சுவார்த்தை இடம்பெறுவதாக நெருக்கமான வட்டாரங்களை மேற்கோள் காட்டி வோல் ஸ்ட்ரீட் ஜெர்னல் செய்தி வெளியிட்டுள்ளது.

உலகின் பெரும் செல்வந்தரான டெஸ்லா நிறுவனத்தின் தலைமை நிர்வாக அதிகாரியான மஸ்க், ட்விட்டர் சமூக ஊடகத்தின் தலைமை பதவியில் இருந்து விலக வேண்டும் என்று கடந்த டிசம்பரில் ட்விட்டரில் நடத்தப்பட்ட வாக்கெடுப்பில் பெரும்பாலானோர் வாக்களித்தனர்.

கடந்த ஆண்டு 44 பில்லியன் டொலருக்கு ட்விட்டரை மஸ்க் வாங்கியது தொடக்கம் அவர் மேற்கொண்ட நடவடிக்கைகள் பெரும் விமர்சனத்திற்கு உள்ளானமை குறிப்பிடத்தக்கது.

### யூடியுப் வீடியோவுக்காக

## விமானத்தை மோதவிட்டவருக்கு இருபது ஆண்டு சிறை வாய்ப்பு



அமெரிக்காவில் பார்வையாளர் எண்ணிக்கையை அதிகரிப்பதற்காக தனது சொந்த விமானத்தையே மோதவிட்ட யூடியுபர் ஒருவர் விசாரணைக்கு இடையூறு செய்த குற்றச்சாட்டை ஒப்புக்கொள்ள இணங்கியதாக அமெரிக்க நீதித் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

கலிபோர்னியாவில் உள்ள லொஸ் பெட்ரஸ் தேசிய பூங்காவில் 2021 ஆம் தனது சிறிய ஒற்றை எஞ்சின் விமானத்தை மோதவிட்டு வேண்டுமென்று சிதைவுகளை அழித்ததற்காக 29 வயது ட்ரவோர் ஜகப் என்பவர் 20 ஆண்டுகள் வரை சிறை தண்டனைக்கு முகம்கொடுக்கும் நிலை ஏற்பட்டிருப்பதாக அமெரிக்க வழக்கறிஞர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

விமானம் மோதுவதற்கு முன்னர் அதில் இருந்து பாய்ந்து பாரசூட்டில் இருந்து எடுக்கப்பட்ட வீடியோவை அவர் யூடியுபில் பதிவேற்றி இருந்தார். அப்போது அது 2.9 மில்லியன் முறை பார்க்கப்பட்டிருந்தது. விமானம் செயலிழந்ததாக ஆரம்ப விசாரணையில் அவர் கூறியிருந்தார். விமானத்தின் சிதைவுகள் எங்கே என்று தெரியவில்லை என்றும் குறிப்பிட்டிருந்தார்.

எனினும் அவர் அந்த விமானச் சிதைவுகளை அழித்திருப்பது விசாரணையில் பின்னர் கண்டறியப்பட்டது.

அவரது விமான ஓட்டி அனுமதிப் பத்திரம் கடந்த ஆண்டு ரத்துச் செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

நுவரெலியாவில்

# கண் சத்திரசிகிச்சையால் பாதிக்கப்பட்டோருக்கு இழப்பீடு!

## அமைச்சரவையில் வலியுறுத்தவுள்ளதாக ஜீவன் தெரிவிப்பு



நுவரெலியா மாவட்ட வைத்தியசாலையில் மேற்கொள்ளப்பட்ட கண் சத்திர சிகிச்சையால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு இழப்பீடு வழங்கப்பட வேண்டும். இது தொடர்பில் அமைச்சரவையில் வலியுறுத்தவுள்ளதாக, இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளரும் நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சருமான ஜீவன் தொண்டமான் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று (12) நடைபெற்ற விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே, இவ்வாறு கூறினார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்த போது,

"நுவரெலியா மாவட்ட வைத்தியசாலையில் அண்மையில் கண் சத்திர சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். காலாவதியான மருந்து பாவனையாலேயே இந்நிலைமை ஏற்பட்டுள்ளது எனக் கூறப்படுகின்றது. பாதிக்கப்பட்ட மக்கள் தற்போது குணமடைந்து வருகின்றனர்.

ஜனாதிபதி, நிதி அமைச்சர், சுகாதார அமைச்சர் ஆகியோருடன் இது சம்பந்தமாக அமைச்சரவையில் பேச்சு நடத்தவுள்ளேன். பாதிக்கப்பட்ட மக்களுக்கு இழப்பீடு வழங்கப்பட வேண்டும். அதற்கான நடவடிக்கையை நான் மேற்கொள்வேன்.

இதேவேளை, நுவரெலியாவில் வறுமை வீதம் அதிகரித்துள்ளது. பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கு ஆயிரம் ரூபா சம்பளம் போதாது. சம்பள நிர்ணய சபைக்கு நாம் செல்லவுள்ளோம். இதற்கு தொழிற்சங்கங்களின் ஆதரவு முக்கியம்.

கடந்த 2022ஆம் ஆண்டு பணவீக்கம் 60 வீதமாக இருந்தது. தற்போது 35 வீதமாக குறைவடைந்துள்ளது. அடுத்த டிசெம்பர் ஆகும்போது பணவீக்கம் ஒற்றை இலக்கத்துக்கு வரும் என எதிர்பார்க்கப்படுகின்றது" என்றார்.

# மத்திய வங்கியின் மூலமாக இனி சமுர்த்தி வங்கிகள் கண்காணிப்பு

## செயற்றிட்டமொன்று விரைவில் முன்னெடுப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**



சமுர்த்தி வங்கிக் கட்டமைப்பின் வெளிப்படைத் தன்மையை உறுதிப்படுத்தும் வகையில் மத்திய வங்கியின் மூலம் சமுர்த்தி வங்கிகளை கண்காணிக்கும் செயற்றிட்டமொன்றை முன்னெடுப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக, நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்தார்.

எந்த விதத்திலும் சமுர்த்தி வங்கிகளை பலவீனப்படுத்தும் நோக்கம் அரசாங்கத்துக்கு கிடையாதெனத் தெரிவித்த அவர், மத்திய வங்கியின் கண்காணிப்புச் செயற்பாடுகள் தொடர்பாக பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு வருவதுடன், எதிர்வரும் இரு வார காலத்துக்குள் அதற்கான உறுதியான தீர்மானம் எடுக்கப்படுமெனவும் தெரிவித்தார்.

அதைவேளை, சமுர்த்தி வங்கிக் கட்டமைப்பை மத்திய வங்கி கண்காணிப்பதற்கான செயற்பாடுகளை முன்னெடுக்குமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஆலோசனை வழங்கியுள்ளதாகவும், அவர் தெரிவித்தார்.

அதற்கிணங்க, சமூக வலுவூட்டல் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சு இவ்விடயம் தொடர்பாக இலங்கை மத்திய வங்கியுடன் எதிர்வரும் வாரம் பேச்சுவார்த்தையில் ஈடுபடவுள்ளதாகவும், அவர் தெரிவித்தார்.

வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ள 'அஷ்வசும' நலன்புரி நன்மைகள் கொடுப்பனவுத் திட்டம் தொடர்பாக பாராளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற விவாதத்தின் போது, பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா எழுப்பிய கேள்விகளுக்குப் பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்த போது,

"சமுர்த்தி வங்கிக் கட்டமைப்பு வெளிப்படைத்தன்மையுடன் செயற்படவில்லை.

06

களுத்துறை யுவதி மர்ம மரணம்

# கைதான சந்தேக நபருக்கு 26 வரை விளக்கமறியல்

களுத்துறை பிரதேசத்தில் 16 வயதுச் சிறுமி மர்மமான முறையில் மரணமடைந்த சம்பவம் தொடர்பாக கைது செய்யப்பட்ட பிரதான சந்தேகநபரை இம்மாதம் 26ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு, களுத்துறை பிரதான நீதவான் நீதா ஹேமமாலி ஹால்பன்தெனிய உத்தரவிட்டுள்ளார்.

களுத்துறையைச் சேர்ந்த இந்தச் சிறுமி கடந்த சனிக்கிழமை (06) களுத்துறையிலுள்ள ஹோட்டலொன்றிலின் மேல் மாடியிலிருந்து விழுந்து உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக விசாரணை மேற்கொண்ட பொலிஸார், களுத்துறை தெற்கு இசுரு உயனவைச் சேர்ந்த 29 வயது சந்தேகநபரை

06

# தேசிய பேரவை உப குழுவின் முதலாவது இடைக்கால அறிக்கை

## உப குழுவின் தலைவர் நாமல் எம்.பியால் சமர்ப்பிப்பு

தேசிய பேரவையின் குறுகிய, நடுத்தர மற்றும் நீண்டகால தேசிய கொள்கைகளை வகுப்பதில் முன்னுரிமையை அடையாளம் காணல் பற்றிய உப குழுவின் முதலாவது இடைக்கால அறிக்கையை உப குழுவின் தலைவர், பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ நேற்று (12) பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தார்.

இந்த அறிக்கையை பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு தேசிய பேரவையின் அனுமதி நேற்று முன்தினம் (11) வழங்கப்பட்டது.

மினுவாங்கொடையில்

# காணாமல் போன இருவர் சடலங்களாக நேற்று மீட்பு

மினுவாங்கொடை, வாரியபொல பகுதியில் இரண்டு ஆண்களின் சடலங்கள் நேற்று (12) கண்டெடுக்கப்பட்டன. வாரியபொல பிரதேசத்தில் வயல் ஒன்றுக்கருகில் அமைந்துள்ள நீர் நிரம்பிய புதைக்குழியொன்றிலிருந்து இந்த சடலங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்நபர்கள் 24 மற்றும் 34 வயதுடையவர்களென தெரியவந்துள்ளது.

இவ்விருவரும் கடந்த 10ஆம் திகதி முதல் காணாமல் போயிருந்த இருவரென பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

# இம்ரான் கானுக்கு 02 வாரங்கள் பிணை வழங்கியது நீதிமன்றம்



பாகிஸ்தான் முன்னாள் பிரமதமர் இம்ரான் கானுக்கு, அல் காதிர் அறக்கட்டளை வழக்கில் 02 வார கால பிணை வழங்கி இஸ்லாமாபாத் உயர் நீதிமன்றம் நேற்று வெள்ளிக்கிழமை உத்தரவிட்டது.

தனக்கு எதிரான வழக்கு தொடர்பில் முன்பிணை கோருவதற்காக இஸ்லாமாபாத் உயர் நீதிமன்றத்துக்கு இம்ரான் கான் கடந்த செவ்வாய்க்கிழமை (09) சென்றிருந்தபோது அவரை துணை இராணுவத்தினர் கைது செய்தனர்.

அல் காதிர் அறக்கட்டளையில் இலஞ்சம் பெற்ற குற்றச்சாட்டில் பொறுப்புடைமை பணியகத்தினால் அவர் கைது செய்யப்பட்டார். அவரை 08 நாட்கள் விளக்கமறியலில் வைக்குமாறு தேசிய பொறுப்புடைமை நீதிமன்றம் கடந்த புதன்கிழமை (10) உத்தரவிட்டது.

இம்ரான் கைதையடுத்து, அவரின் பி.ரி.ஐ. கட்சி ஆதரவாளர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். இதனால் பல்வேறு இடங்களில் வன்முறை வெடித்தது. இதனால் குறைந்த பட்சம் 08 பேர் பலியானதுடன் சுமார் 300 பேர் காயமடைந்தனர்.

இதற்கிடையே நீதிமன்ற வளாகத்தில் இம்ரான் கான் கைது செய்யப்பட்டதை எதிர்த்து அவரது சட்டத்தரணிகள் பாகிஸ்தான் உயர் நீதிமன்றத்தில் மேல் முறையீடு செய்திருந்தனர். இந்த மனு நேற்று விசாரணைக்கு வந்தபோது, இம்ரான் கான் கைது செய்யப்பட்டமை சட்டவிரோதமானதென நீதிமன்றம் உத்தரவிட்டது.

எனினும், அவரை வீடு திரும்ப அனுமதிக்கவில்லை. இஸ்லாமாபாத் உயர் நீதிமன்றத்தில் இம்ரான் கானை நேற்று ஆஜராக உத்தரவிட்ட உயர் நீதிமன்றம், அதுவரை இம்ரான் கான் தடுத்து வைக்கப்பட்டிருந்த இஸ்லாமாபாத் பொலிஸ் தலைமையக வளாகத்திலேயே ஒரு 'வதிவாளராக' தங்கியிருக்குமாறு உத்தரவிட்டது. நேற்று வெள்ளிக்கிழமை

06

# அரசின் நலன்புரி கொடுப்பனவுகளில் அரசியல் தலையீடுகள் இருக்க கூடாது

## வறுமையான மக்களை சென்றடைவதை உறுதி செய்ய வேண்டும் - சபையில் சார்ள்ஸ் நிர்மலநாதன் எம்.பி

**லோரன்ஸ் செல்வநாயகம்**



அரசாங்கத்தின் நலன்புரி திட்டங்களின் போது, அரசியல் நோக்கங்களின்றி உண்மையாகவே வறுமை நிலையிலுள்ள மக்களை இனங்கண்டு நடைமுறைப்படுத்துவது அவசியமென, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற 'அஷ்வசும' நலன்புரிக் கொடுப்பனவுகள் தொடர்பான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்த விவாதத்தில் தொடர்ந்து உரையாற்றிய அவர்,

"நாட்டில் 42 சதவீதமான மக்கள் வறுமைக்கோட்டின் கீழேயே வாழ்கின்றனர். இனங்களுக்கிடையிலான சமத்துவமான அரசியல் கொள்கையும் முறையான பொருளாதாரக் கொள்கையும் நடைமுறையில் இருக்குமானால், நாட்டிலிருந்து வறுமையை ஒழித்திருக்க முடியும்.

நலன்புரிக் கொடுப்பனவுகளின் மூலம் வறுமையை ஒழிக்க முடியாது. அதேவேளை, நடைமுறையிலுள்ள நலன்புரிக் கொடுப்பனவுகளில் பல குறைபாடுகள் காணப்படுகின்றன.

அந்தக் குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்காக அமைச்சினால் புதிய விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. அது பரிசீலனையில் இருப்பதாக துறைக்கு பொறுப்பான இராஜாங்க அமைச்சர் தெரிவித்துள்ள நிலையில், அரசியல் மற்றும் பக்கச் சார்பான முறையிலின்றி வறுமை நிலையில் இருப்பவர்கள் யார் என்பதனை முறையாக ஆராய்ந்து இந்தக் கொடுப்பனவுகளை வழங்குவது அவசியமானதாகும்.

அத்துடன் முதியோருக்கான கொடுப்பனவுகள், தபால் நிலையங்கள் மற்றும் உப தபாலகங்களிலும் வழங்கப்பட்டு வந்த நிலையில் தற்போது அதனை சமுர்த்தி வங்கிகள் மூலம் மாத்திரம் வழங்குவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளமை சிக்கலானது.

சில பிரதேசங்களில் போதியளவு சமுர்த்தி வங்கிகள் காணப்படவில்லை. இதனால் அந்தப் பணத்தை பெற்றுக்கொள்வதற்காக பெருமளவு பணத்தை செலவிட வேண்டியுள்ளது.

அதனைக் கவனத்திற்கொண்டு இந்தக் கொடுப்பனவை கிராம அலுவலகங்களில் பெற்றுக்கொள்ளக்கூடியவாறு ஏற்பாடுகளை மேற்கொள்ள வேண்டியது அவசியம்" என்றார்.



இந்தியாவுக்கான இலங்கையின் துணை உயர்ஸ்தானிகர் டாக்டர் வெங்கடேஷ்வரன், தலைமை விஞ்ஞானியும் உலக சுகாதார அமைப்பின் முன்னாள் துணை பணிப்பாளர் நாயகமுமான டாக்டர் சௌமியா சுவாமிநாதனை சந்தித்தபோது பிடிக்கப்பட்ட படம். இலங்கை மற்றும் அறக்கட்டளைக்கு இடையேயான விவசாய ஒருங்கிணைப்புத் திட்டம் தொடர்பாக டாக்டர் எம்.எஸ்.சுவாமிநாதன் ஆராய்ச்சி அறக்கட்டளையின் தற்போதைய தலைவரான டாக்டர் சௌமியா சுவாமிநாதனுடன் டாக்டர் வெங்கடேஷ்வரன் கலந்துரையாடினார்.

# சுற்றுலா பயணிகளுடன் மற்றுமொரு சொகுசு கப்பல்

## 420 பயணிகளுடன் நேற்று வந்தடைந்தது




420 சுற்றுலாப் பயணிகளுடன் மற்றுமொரு அதி சொகுசுக் கப்பல் நேற்று (12) இலங்கையை வந்தடைந்துள்ளது. MS Europa2 எனும் இந்தக் கப்பல் ஹம்பாந்தோட்டை துறைமுகத்தை வந்தடைந்துள்ளதாக, துறைமுக அதிகாரசபை தெரிவித்தது.

இந்தக் கப்பலில் வருகை தந்த சுற்றுலாப் பயணிகள் நாட்டின் பல்வேறு பகுதிகளுக்கும் விஜயம் செய்யவுள்ளனர். குறிப்பாக கதிர்காமம், சங்கிரில்லா கோல்ப் கிளப், யால, உடவளவை பூங்கா மற்றும் ஹம்பாந்தோட்டை சுற்றுலாத் தளங்களுக்கு அவர்கள் செல்லவுள்ளனர்.

அடுத்து வரும் இரு நாட்களில் சைப்பிரஸ் நாட்டை நோக்கி MS Europa2 கப்பல் பயணத்தை ஆரம்பிக்கவுள்ளது. அண்மைக்காலமாக பல நாடுகளிலிருந்தும் இலங்கைக்கு சுற்றுலா சொகுசுக் கப்பல்கள் வருகை தந்த வண்ணமுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இரத்தினபுரியில் இடம்பெற்ற விபத்தில் இளம் தம்பதியினர் பலி

**காவத்தை தினகரன் விசேட நிருபர்**

இரத்தினபுரி, எம்பிலிபிட்டிய பிரதான வீதியில் திருவானக்கட்டை பிரதேசத்தில் நேற்று (12) காலை இடம்பெற்ற வாகன விபத்தில் இளம் தம்பதியினர் உயிரிழந்துள்ளனர்.

காவத்தை ஒப்பாத்த தோட்டப் பிரதேசத்தை சேர்ந்தவர்களே இவ்வாறு உயிரிழந்துள்ளதாக, பொலிஸார் தெரிவித்தனர்.

கணவன், மனைவியாகிய இவர்கள் இருவரும் காவத்தை பிரதேசத்திலிருந்து இரத்தினபுரி நோக்கி மோட்டார் சைக்கிளில் பயணித்துக்கொண்டிருந்த போது, திருவானக்கட்டை பிரதேசத்தில் பஸ் வண்டியொன்றுடன் இவர்களின் மோட்டார் சைக்கிள் மோதியதில், இவர்கள் கீழே விழுந்துள்ளனர். அவ்வேளையில் எதிரே வந்த பாரிய டிப்பர் லொறியொன்று கீழே விழுந்த இவர்களின் மீது மோதியதில் இருவரும் அவ்விடத்திலேயே உயிரிழந்துள்ளதாக பொலிஸாரின் விசாரணையில் தெரியவந்துள்ளது.

இந்த விபத்துத் தொடர்பாக பொலிஸார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

சிறுவர் இல்லத்திலிருந்து கடத்தி வந்து

# போதைப்பொருள் பாவனைக்காக சிறுமியை யாசகம் பெற வைத்த பெண்

## கொலன்னாவையில் அதிரடியாக கைது

சிறுவர் இல்லத்திலிருந்து கடத்தி வந்த 11 வயதுச் சிறுமியை, தனது போதைப்பொருள் பாவனைக்காக யாசகம் பெற வைத்து வருமானம் ஈட்டிய குற்றச்சாட்டில் பெண்ணொருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கொழும்பு, ஒபேசேகரபுர கொலன்னாவைக்குச் செல்லும் வீதியில் இந்தச் சிறுமியை யாசகம் பெறுவதற்கு பயன்படுத்துவதாக கிடைத்த தகவலின்படி பொலிஸார் அதிரடியாக சோதனை மேற்கொண்டனர். இதன்போது, அந்தப் பகுதியில் இந்தச் சிறுமி யாசகம் பெற்று வந்தமையை அவதானித்த பொலிஸார், சிறுமியை தமது பொறுப்பில் எடுத்தனர்.

இந்தச் சிறுமி, அம்பேபுஸ்ஸ பிரதேசத்திலுள்ள சிறுவர் இல்லத்தில் தங்கியிருந்ததாகவும் அங்கிருந்து சிறுமியை இந்தச் சந்தேகநபர் அழைத்துச் சென்று தனது மகனுடன் சேர்ந்து யாசகம்

06

# கடவுச்சீட்டை பெறுவதற்கு நாள் நேரத்தை ஒதுக்கவும்

## குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களம் அறிவிப்பு

கடவுச்சீட்டை பெற்றுக்கொள்வதற்காக குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்துக்கு வரும் போது, அதற்கான நாள் அல்லது நேரத்தை ஒதுக்கிய பின்னர் மட்டுமே வர வேண்டுமென, குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களம் பொதுமக்களுக்கு அறிவுறுத்தல் விடுத்துள்ளது.

நாள் அல்லது நேரத்தை ஒதுக்காதவர்கள் கடவுச்சீட்டுகளை பெற்றுக் கொள்ள வருவதைத் தவிர்க்குமாறும், அத்திணைக்களம் கோரிக்கை விடுத்துள்ளது.

எனினும், மருத்துவ சிகிச்சைகளுக்காக வெளிநாடு செல்ல உள்ளவர்கள் மற்றும் இரண்டு அல்லது மூன்று வார விடுமுறையில் வெளிநாட்டிலிருந்து இலங்கை வந்து, கடவுச்சீட்டை தயார்படுத்திக்கொள்ள உள்ளவர்கள் அதற்கான உரிய ஆவணங்களை காண்பித்து கடவுச்சீட்டுகளை பெற்றுக்கொண்டு செல்ல முடியுமெனவும், குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களம் அறிவித்துள்ளது. எதிர்வரும் இரு வாரங்களின் பின்னர் இலகுவில் கடவுச்சீட்டுகளை பெற்றுக்கொள்வதற்கான முறைமை ஒன்றை தயாரிக்க உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அண்மைய நாட்களாக குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்தின் முன்னால் நீண்ட வரிசைகளை அவதானிக்க முடிந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

## நாணய மாற்று

| நாணயம் | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|
| அவுஸ்திரேலியா டொலர் | 206.30 | 219.03 |
| கனடியன் டொலர் | 228.52 | 242.56 |
| யூரோ | 343.37 | 362.22 |
| ஜப்பான் யென் | 2.3420 | 2.4688 |
| சிங்கப்பூர் டொலர் | 233.49 | 246.88 |
| ஸ்டேலிங் பவுன்ஸ் | 388.64 | 409.24 |
| சுவிஸ் பிராங்க் | 349.42 | 371.48 |
| அமெரிக்க டொலர் | 313.45 | 328.67 |

| மத்திய கிழக்கு | குறித்த விலை | | குறித்த விலை |
|---|---|---|---|
| பஹரின் டினார் | 853.41 | கட்டார் ரியால் | 88.05 |
| குவைத் டினார் | 1,050.55 | சவூதி ரியால் | 85.78 |
| ஓமான் ரியால் | 835.69 | ஐ.அ. இராச்சியம் டிர்ஹாம் | 87.61 |

தினகரன்
THINAKARAN
35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

சோபகிருது வருடம் சித்திரை மாதம் 30ஆம் நாள் சனிக்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1444 ஷவ்வால் பிறை 22

### குறள் தரும் சிந்தனை

கனவினும் இன்னாது மன்னோ வினைவேறு
சொல்வேறு பட்டார் தொடர்பு

சொல்லுக்கும் செயலுக்கும் தொடர்பில்லாதவரின் நட்பு கனவிலேகூடத் துன்பத்தைத்தான் கொடுக்கும்.

## கொவிட் தொற்றை கட்டுப்படுத்த மிகுந்த விழிப்புணர்வு அவசியம்!

இலங்கையில் கொவிட் தொற்று படிப்படியாக அதிகரித்து வருவது நல்லதொரு அறிகுறியல்ல. எமது அயல்நாடான இந்தியாவில் சமீப காலமாக கொவிட் தொற்று அந்நாட்டின் பல பிரதேசங்களிலும் அதிகரித்து வருகின்ற நிலையில், இலங்கையிலும் தற்போது கொவிட் தொற்றாளர்களின் எண்ணிக்கையில் அதிகரிப்பு ஏற்பட்டு வருகின்றது. இலங்கையில் கொவிட் தொற்று காரணமாக சமீப நாட்களாக ஓரிரு மரணங்களும் சம்பவித்துள்ளன.

இவ்வாறான நிலைமை ஆரோக்கியமானதல்ல. கொவிட் தொற்றாளர்களின் எண்ணிக்கையானது மேலும் அதிகரித்தபடி செல்லுமானால், எமது நாட்டின் இன்றைய இயல்பு நிலைமை மோசமடைவதற்கு இடமுண்டு. மக்கள் பூரண ஒத்துழைப்பு வழங்கி அடிப்படை சுகாதாரப் பழக்கவழக்கங்களைக் கடைப்பிடித்தால் மாத்திரமே கொவிட் தொற்று நிலைமையை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முடியும்.

கொவிட் தொற்று காரணமாக எமது நாடும் மக்களும் அனுபவித்த துன்பங்கள் அறியாததொன்றல்ல. நாட்டின் பொருளாதாரமே அதலபாதாளத்துக்குள் வீழ்ந்து விடுவதற்கு கொவிட் தொற்றுத்தான் பிரதான காரணமாக அமைந்திருந்தது. நாட்டின் பொருளாதாரம் மாத்திரமன்றி, குடும்ப வருமானமும் வீழ்ச்சிக்கு உள்ளானது. பொருளாதார வீழ்ச்சி காரணமாகவே நாட்டில் அரசியல் நெருக்கடியும் உருவெடுத்திருந்தது.

அரசியல் நெருக்கடிக்கு உரிய தீர்வைக் கண்டு கொண்டதன் காரணமாக, நாட்டின் பொருளாதாரத்திலும் படிப்படியான அபிவிருத்தி ஏற்பட்டு வருகின்றது. ஜனாதிபதியாகப் பதவியேற்றுக் கொண்ட ரணில் விக்கிரமசிங்க முன்னெடுத்து வருகின்ற சிறப்பான கொள்கைத் திட்டங்கள் காரணமாக எமது நாட்டின் பொருளாதாரம் தற்போது படிப்படியான வளர்ச்சியைக் கண்டு வருகின்றது.

இவ்வாறிருக்கையில், நாட்டில் கொவிட் தொற்று மீண்டும் அதிகரிப்பதற்கு நாம் இடமளிப்பது முறையல்ல. கொவிட் தொற்று மீண்டும் அதிகரிக்கத் தொடங்குமானால், பொருளாதாரம் மீண்டும் மோசமான நிலைமைக்குச் சென்று விடும் ஆபத்து உள்ளதென்பதை மறந்து விடலாகாது. உள்நாட்டுப் பொருளாதாரம் வீழ்ச்சியடையும் ஆபத்து இருக்கின்றது. அத்துடன் எமது நாட்டை நோக்கி வருகை தருகின்ற சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையிலும் பெருவீழ்ச்சி ஏற்பட்டு விடுமென்பதை மறந்து விடலாகாது.

நாட்டுக்கு வருமானம் தருகின்ற தொழில் துறைகளில் சுற்றுலாத்துறை பிரதானமானதாகும். மாலைதீவு, நேபாளம் போன்ற நாடுகள் சுற்றுலாத் துறை மூலமே அதிக வருமானம் ஈட்டி வருகின்றன. உலக நாடுகளில் இருந்து சுற்றுலாப் பயணிகள் அதிகளவில் வருகை தருவார்களாயின் ஒரு நாட்டின் பொருளாதாரம் தானாகவே உச்சத்தை நோக்கிச் செல்ல ஆரம்பித்து விடும். சுற்றுலாப் பயணிகளின் வருகை வீழ்ச்சியடைவது ஒரு நாட்டின் பொருளாதாரத்தையே வீழ்ச்சியடையச் செய்து விடும் என்பதே உண்மை.

இலங்கைக்கு முன்னொரு காலத்தில் சுற்றுலாப் பயணிகள் பெருமளவில் வருகை தந்தனர். ஆனால் ஈஸ்டர் தினத்தன்று பயங்கரவாதிகள் மேற்கொண்ட குண்டுத்தாக்குதல்கள் காரணமாக இலங்கைக்கு சுற்றுலாப் பயணிகள் வருகை தருவது முற்றாகவே வீழ்ச்சியடைந்தது. அதன் காரணமாக சுற்றுலாத்துறை மூலமான அந்நிய செலாவணியை எமது நாடு இழக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டது. நாட்டின் பொருளாதாரத்துக்கு அவ்வேளையில் பலத்த அடி விழுந்தமை நினைவிருக்கலாம்.

சுற்றுலாத்துறை வீழ்ச்சியில் இருந்து எமது நாடு மீண்டெழுவதற்கு சில வருடங்கள் எடுத்துக் கொண்டது. கொவிட் தொற்று, பொருளாதார நெருக்கடி போன்றவற்றையெல்லாம் தாண்டி சுற்றுலாத்துறையில் நாம் மீண்டெழுந்த வந்து கொண்டிருக்கையில், இப்போது கொவிட் தொற்று பாதிப்புக்கு மீண்டும் இடம்கொடுப்பது நல்லதல்ல. இந்த ஆபத்தை எவ்வாறாயினும் நாம் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவது அவசியம். இல்லையேல் நாடு மீண்டும் பொருளாதார பாதிப்புக்கு உள்ளாக வேண்டியேற்படலாம்.

இத்தொற்று தோற்றம் பெற்றதைத் தொடர்ந்து உலகின் உல்லாசப் பயணத்துறை பாதிக்கப்பட்டது. அத்தோடு ஏற்றுமதி, இறக்குமதி துறைகள் மாத்திரமல்லாமல் உற்பத்தித் துறையும் கூட இத்தொற்றின் விளைவாகப் பாதிப்படைந்தது. இலங்கை போன்ற வளர்முக நாடுகளுக்கு இவை பெரும் சவாலாக அமைந்திருந்தன.

சீனாவிலும் கொவிட் தொற்று சமீப காலமாக அதிகரித்து வருவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. இவற்றையெல்லாம் கருத்திற் கொண்டு மக்கள் எவ்வாறாயினும் மிகுந்த அவதானத்தைக் கடைப்பிடித்து கொவிட் தொற்றைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்கு ஒத்துழைப்பு வழங்குவது பிரதானமாகும். நாம் கடந்து வந்த கடினமான பாதையை ஒதுபோதும் மறந்து விடலாகாது. அவ்வாறான இக்கட்டானதொரு நிலைமைக்கு நாடு மீண்டும் செல்லாமல் இருப்பதற்கு மக்களின் ஒத்துழைப்பே அவசியமாகின்றது.

editor.tkn@lakehouse.lk

# எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் விபத்தினால் பாதிக்கப்பட்ட கடற்றொழிலாளர்களுக்கு நான்காம் கட்ட நஷ்டஈடு

எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் விபத்தில் பாதிக்கப்பட்ட கடற்றொழிலாளர்களுக்கு நான்காம் கட்ட நட்டஈடாக சுமார் 160.5 கோடி ரூபாவுக்கான காசோலைகள் வழங்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் (11.05.2023) கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையிலும், கடற்றொழில் இராஜாங்க அமைச்சர் பியல் நிஷாந்த டி சில்வாவின் பங்கேற்புடனும் கடற்றொழில் அமைச்சில் நடைபெற்றது.

எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் விபத்து காரணமாக பாதிக்கப்பட்ட பகுதிகளில் கடற்றொழில் மேற்கொள்வதற்கு தடை விதிக்கப்பட்டதையடுத்து தமது வாழ்வதாரத்தை இழந்த சுமார் 15,000 கடற்றொழிலாளர்கள் மற்றும் கடற்றொழில் சார்ந்த தொழிலை வாழ்வாதாரமாக கொண்டிருந்த சுமார் 5,000 பேருக்கான நட்டஈடு கடற்றொழில் அமைச்சின் முயற்சியினால், இம்முறை வழங்கப்படவுள்ள நிலையில், நேற்றுமுன்தினம் 30 பேருக்கான காசோலைகள் வழங்கப்பட்டுள்ளன.

ஏனையோருக்கான காசோலைகள், சம்பந்தப்பட்ட பிரதேச செயலகங்கள் ஊடாக வழங்கி வைக்கப்படவுள்ளன.

குறித்த கப்பல் விபத்தினால் கடலில் கலக்கப்பட்ட பல்வேறு கழிவுப் பொருட்களினால் வலைகளுக்கு ஏற்பட்ட பாதிப்புக்களுக்காக 20 கடற்றொழிலாளர்களுக்கு கப்பலின் காப்புறுதி நிறுவனத்தின் நட்டஈட்டுத் தொகையும் இதன் போது வழங்கப்பட்டது.



### அமைச்சர் டக்ளஸ் தலைமையில் வைபவம்





இதுவரை கடற்றொழிலாளர்களுக்கு நட்டஈடு வழங்குவதற்காக கப்பல் காப்புறுதி நிறுவனத்தினால் 3068 மில்லியன் ரூபா (ரூ. 300 கோடிக்கும் அதிக தொகை) வழங்கப்பட்டுள்ளதுடன் முதல் மூன்று கட்டங்களில் 1463 மில்லியன் ரூபா (ரூ. 146 கோடி) வாழ்வதாரத்தை இழந்த கடற்றொழிலாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

நான்காம் கட்ட நட்டஈட்டு கொடுப்பனவிற்காக கப்பல் காப்புறுதி கம்பனியால் இலங்கை அரசுக்கு 1605 மில்லியன் ரூபா (ரூ. 160.5 கோடி) வழங்கப்பட்டுள்ளதுடன், நான்காம் கட்டம் நிறைவடையும் போது வாழ்வாதாரத்தை இழந்த கடற்றொழிலாளிக்கு, தொழில்முறையின் பிரகாரம் தலா ரூ. 112,500 முதல் ரூ. 295,000 வரை கிடைக்கவுள்ளது.

சுமார் 22 நாட்கள் மீன்பிடி தடை விதிக்கப்பட்ட நீர்கொழும்பு களப்பில் கடற்றொழிலில் ஈடுபடும் மீனவர்களுக்கும் ஆகக் குறைத்தது ரூ. 45,000 நட்டஈட்டுத் தொகை கிடைக்கும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

அதேவேளை, கடற்றொழில் சார்ந்த தொழில்களை மேற்கொள்ளும் மீன் வியாபாரிகள், கருவாடு உற்பத்தியாளர்கள், மீன்பிடிவலை விற்பனையாளர்கள், படகு திருத்துனர்கள் போன்றோருக்கு மீன்பிடி தடையால் ஏற்பட்ட பாதிப்பிற்காக அவர்களது தொழில் முறைகளின் பிரகாரம் தலா ரூ. 22,500 முதல் ரூ. 336,000 வரை நட்டஈடு வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.





பேர்ள் எக்ஸ்பிரஸ் கப்பல் விபத்தினால் கடற்றொழிலாளர்களுக்கு நேரடியாக ஏற்பட்ட பாதிப்புகள் தொடர்பாக ஆராய்வதற்காக கடற்றொழில் அமைச்சினால் நியமிக்கப்பட்ட குழுவினால் தயாரிக்கப்பட்ட 06 அறிக்கைகள் கடற்றொழில் அமைச்சினால் காப்புறுதி நிறுவனத்திற்கு ஏற்கனவே சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

முதலாவது அறிக்கை விபத்து ஏற்பட்டு இரண்டு வாரங்களில் சமர்ப்பிக்கப்பட்டதுடன், 06 ஆவது அறிக்கை கடந்த 2022 ஜூலை மாதம் சமர்ப்பிக்கப்பட்டது.

இக்குழுவினால் தயாரிக்கப்பட்ட இறுதி அறிக்கை குழுவின் தலைவரும் கடற்றொழில் அமைச்சின் மேலதிக செயலாளருமான தம்மிக ரணதுங்க மற்றும் கடற்றொழில் நீரியல்வள திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் சுசந்த கஹவத்த ஆகியோரினால் கடற்றொழில் அமைச்சரிடம் இந் நிகழ்வின் போது கையளிக்கப்பட்டது.

இந்நிகழ்வில் கடற்றொழில் அமைச்சின் செயலாளர் திருமதி இந்து இரத்நாயக்க, மேலதிக செயலாளர் நாமல் தலங்கம, கொழும்பு, கம்பஹா மற்றும் களுத்துறை மாவட்ட செயலாளர்களும் கலந்து கொண்டனர்.

# அவுஸ்திரேலியத் தமிழ் இலக்கிய கலைச்சங்கம் ஏற்பாடு செய்துள்ள வாசிப்பு அனுபவப் பகிர்வு

### இன்று மெய்நிகரில் நிகழ்ச்சி

அவுஸ்திரேலியத் தமிழ் இலக்கிய கலைச்சங்கம் ஏற்பாடு செய்துள்ள வாசிப்பு அனுபவப் பகிர்வு நிகழ்ச்சி (மெய்நிகர் நிகழ்ச்சி) இன்று 1305 2023 சனிக்கிழமை நடைபெறுகின்றது.

சங்கத்தின் பரிசுகளைப் பெற்ற இலங்கை எழுத்தாளர்களின் நூல்கள் இந்நிகழ்வில் வெளியிடப்படும்.

தலைமையுரையை திருமதி சகுந்தலா கணநாதன் வழங்குவார்.

வேப்பமரமும் பவளம் ஆச்சியும் (சிறுகத்து விவேகானந்தனூர் சதீஸ்), கடவுள் என்பது துரோகியாயிருத்தல் (கவித்து சி. கருணாகரன், மன்னார் மாதோட்டப் புலவர்கள் – கலைஞர்கள் (கட்டுரை அருட் திரு. தமிழ்நேசன் அடிகளார்) ஆகிய நூல்கள் வெளியிடப்படவுள்ளன.

திருமதி கலாதேவி பாலசண்முகன், தானா. விஷ்ணு, பாடும்மீன் சு. ஸ்ரீகந்தராசா ஆகியோர் உரையாற்றுகின்றனர்.

அவுஸ்திரேலியா நேரம்
இரவு : 700 மணி,
இலங்கை – இந்தியா நேரம்
பிற்பகல் 230 மணி
இங்கிலாந்து – முற்பகல் 1000 மணி
நியூசிலாந்து – இரவு 900 மணி
ஜெர்மனி பிரான்ஸ் முற்பகல் 11 மணி
நிகழ்ச்சி ஒருங்கிணைப்பு :
லெ. முருகபூபதி
மெய்நிகர் இணைப்பு:
Join Zoom Meeting
https://us02web.zoom.us/j/81166866803?pwd=VmNxZXZpby8vOWxxTUxVTm1WY2dRdz09




Meeting ID: 811 6686 6803
Passcode: 519729

# கென்யாவின் ஐ.நா அலுவலகத்தில் வெசாக் நிகழ்வு; ஒரு மில்லியன் மரக்கன்றுகள் நடும் திட்டம் ஆரம்பம்

கென்யாவின் நைரோபியில் உள்ள இலங்கை உயர்ஸ்தானிகராலயம், நைரோபியில் உள்ள தாய்லாந்து தூதரகத்துடன் இணைந்து கடந்த 5 ஆம் திகதி நைரோபியில் உள்ள ஐக்கிய நாடுகளின் அலுவலகத்தில் (UNON) வெசாக் தின நிகழ்வை நடத்தியது. ஊக்கமளிக்கும் வெசாக் விழா முதன்முறையாக UNON இன் பிரதான மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

ஐ.நா.வின் துணைச் செயலாளர் மற்றும் UNON இன் பணிப்பாளர் நாயகம் ஸைனப் ஹவா பங்குரா, நைரோபி நகரப் பிராந்திய துணை ஆளுநர் ந்ஜோரொஜ் முச்சிரி, தூதுவர்கள், கென்ய அரசாங்க அதிகாரிகள், கென்ய வெளிநாட்டு அமைச்சின் பிரதிநிதிகள் மற்றும் இலங்கையைச் சேர்ந்தோர் இந்நிகழ்வில் பங்கேற்றனர். இம்முக்கிய நிகழ்வில் கலந்து கொள்ள சுமார் 300 பங்கேற்பாளர்கள் UNON இல் கூடியிருந்தனர்.

உலகெங்கிலும் உள்ள பௌத்தர்களுக்கு வெசாக்கின் முக்கியத்துவத்தை விளக்கி மோதல்களால் பாதிக்கப்பட்ட இன்றைய உலகிற்கு புத்தபெருமானின் போதனைகள் மிகவும் தொடர்புபட்டவை என்பதை வலியுறுத்தி இலங்கையின் உயர்ஸ்தானிகர் வேலுப்பிள்ளை கணநாதன் ஆரம்ப உரையாற்றினார். அத்துடன் வெசாக் தின நிகழ்வு ஆரம்பமானது.

வெசாக் தின கொண்டாட்டங்களை முன்னெப்போதையும் விட பிரமாண்டமாக ஒழுங்கமைக்க UNON வழங்கிய அதிவிசேட ஆதரவுக்கும் ஒத்துழைப்புக்கும் அவர் நன்றி தெரிவித்த அதேவேளையில், ஐக்கிய நாடுகள் சபையில் வெசாக் தினத்தை சர்வதேச ரீதியில் அங்கீகரிக்க 1999 இல் இலங்கை மற்றும் தாய்லாந்து இணைந்து அனுசரணையளித்தன. ஐக்கிய நாடுகளின் பொதுச் சபையின் தீர்மானம் 54/115 ஐ நினைவு கூர்ந்து, புத்தபெருமானின் சமாதானம், இரக்கம் மற்றும் அகிம்சை கோட்பாடுகளுக்கு இது ஒரு உலகளாவிய அங்கீகாரமாகும் என உயர் ஸ்தானிகர் கணநாதன் குறிப்பிட்டார்.



ஐ.நா செயலாளர் நாயகம் அன்டோனியோ குட்டெரெஸ் வழங்கிய வெசாக் தின சிறப்புச் செய்தியை ஐ.நா துணைச் செயலாளர் மற்றும் UNON இன் பணிப்பாளர் நாயகம் ஸைனப் ஹவா பங்குரா வாசித்தார். வெசாக் கோட்பாடுகள் ஐக்கிய நாடுகள் சபையின் குறிக்கோள்களுடன் ஆழமாக ஒத்திசைந்துள்ளன என்றும், சகிப்புத்தன்மை, கருணை மற்றும் மனிதகுலத்திற்கான சேவை பற்றிய புத்தர் பெருமானின் போதனைகள் பிணக்குமிக்க இக்காலகட்டத்தில் ஆறுதலுக்கும் வலிமைக்கும் ஆதாரமாக உள்ளன என்றும் செயலாளர் நாயகத்தின் செய்தி அடிக்கோடிட்டுக் காட்டுகிறது. மேலும், அனைவருக்கும் மிகவும் அமைதியான உலகத்திற்காக ஒற்றுமையுடன் இணைந்து செயல்படுவதன் மூலம் வெசாக் தினத்தின் உணர்வைப் பெறுவதற்கும் இச்செய்தி முன்மொழிந்தது.

ஐ.நா. பணிப்பாளர் நாயகம் மேலும் கூறுகையில், "2030 ஆம் ஆண்டளவில் எமது உயிர்நாடியான சுற்றுச்சூழல் அமைப்புகளை புத்துயிர் பெறச்செய்வது எளிதான முயற்சி அல்ல. ஆனாலும் காலநிலைப் பேரழிவு, பாரியளவிலான உயிர்பலவைகமை இழப்பு மற்றும் உணவுப் பாதுகாப்பின்மை ஆகியவற்றைத் நாம் தவிர்க்க வேண்டுமானால் அம்முயற்சி முக்கியமானதாகவே விளங்குகுன்றது. இதன் பின்னணியில், கென்யாவில் சீரழிந்த சுற்றுச்சூழல் அமைப்புகளை மீண்டும் உயிர்ப்பிக்க இலங்கை உயர்ஸ்தானிகராலயத்தின் தாராளமிக்க ஆதரவிற்கு நாம் நன்றி கூறுகிறோம்.

தலைமுறை மீள்நிலைப்படுத்தலை தொடங்குவதற்கான எமது பகிரப்பட்ட பணியில் நாடுகள் இணைந்தகொள்கின்ற பங்குடமைக்கு இது ஒரு எடுத்துக்காட்டாகும்" எனக் குறிப்பிட்டார்".

நைரோபியிலுள்ள பௌத்த விகாரையின் பிரதம விகாராதிபதி வணக்கத்திற்குரிய யதிரவன விமல தேரர் மற்றும் வணக்கத்திற்குரிய லபுனொருவே சோபித தேரர் ஆகியோர் வெசாக் தின தம்ம பிரசங்கங்களை நிகழ்த்தி ஆசிர்வதித்தனர்.

வெசாக் தின நிகழ்வின் சிறப்பம்சம், கென்ய ஜனாதிபதி கலாநிதி வில்லியம் ரூட்டோ அவர்களினால் தொடங்கப்பட்ட 50 பில்லியன் மரக்கன்றுகளை நடும் திட்டமாகும். அதற்கான பிரசாரத்திற்கான நல்லெண்ணத்தின் வெளிப்பாடாகவும் ஆதரவுக்கான அடையாளமாகவும் இலங்கை உயர்ஸ்தானிகராலயம் மற்றும் கென்யாவிலுள்ள இலங்கையர்கள் குழுவினால் நைரோபி சிட்டி கவுண்டிக்கு ஒரு மில்லியன் மரகன்றுகளையும் நாற்றுகளையும் நன்கொடையாக வழங்கியமையாகும்.

கென்யாவில் மரம் நடும் இயக்கத்திற்கு உயர்ஸ்தானிகர் கணநாதனிடமிருந்து தொடர்ந்து கிடைத்த ஆதரவைக் கண்டு மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன் என மரக் கன்றுகள் மற்றும் நாற்றுகளை ஏற்றுக் கொண்ட பின்னர், நைரோபி நகரப் பிராந்திய துணை ஆளுநர் ந்ஜோரொஜ் குறிப்பிட்டார். அத்துடன் ஆசீர்வதிக்கப்பட்ட வெசாக் நாளில் ஒரு மில்லியன் மரக்கன்றுகளைப் பெற்றுக்கொள்வது குறிப்பிடத்தக்கது என்று அவர் கூறினார்.

இன்றைய பூகோளமயமான உலகில், காலநிலை மாற்றம் மற்றும் சுற்றுச்சூழல் சீர்கேடு ஆகியவை பூமியின் எதிர்காலத்தையே அச்சுறுத்துகின்றன என்பதையும் துணை ஆளுநர் அடிக்கோடிட்டுக் காட்டியதுடன் சிறந்ததோர் உலகை கட்டியெழுப்புவதற்கு ஒன்றுபட்ட முயற்சிக்காக தொடர்ந்தும் உத்வேகமளிக்கின்ற புத்தரின் ஒற்றுமை மற்றும் பரஸ்பர ஆதரவு பற்றிய செய்தியை புகழ்ந்தார்.

கென்ய ஜனாதிபதி தலைமையிலான கென்யாவில் முற்போக்கான மரம் நடும் பிரசாரத்திற்கு ஆதரவை வழங்குவதற்காக கென்யாவில் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற முதல் இராஜதந்திர தூதரகம் இலங்கை உயர்ஸ்தானிகராலயம் என்று பிரதி ஆளுநர் அறிவித்தார. அத்துடன் கென்யாவிற்கும் இலங்கைக்கும் இடையிலான இருதரப்பு உறவுகளை நடைமுறை ரீதியில் ஊக்குவித்துவருகின்ற இலங்கையின் தலைசிறந்த இராஜதந்திரியாக உயர்ஸ்தானிகர் வேலுப்பிள்ளை கணநாதன் விளங்குவதாக அவர் பாராட்டினார்.

# கல்முனை ஆதார வைத்தியசாலையில் சித்திரைப் புத்தாண்டு கலாசார விழா

கல்முனை ஆதார வைத்தியசாலையில் சித்திரை வருடப்பிறப்பை சிறப்பிக்கும் முகமாக சித்திரைப் புத்தாண்டு கலாசார விழா நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

வைத்தியசாலையின் பணிப்பாளர் டொக்டர்.இரா.முரளீஸ்வரன் தலைமையிலும், பிரதிப் பணிப்பாளர் டொக்டர் ஜே. மதன் ஒருங்கிணைப்பிலும் இவ்விழா மிகவும் சிறப்பாக நடைபெற்றது.

இந்நிகழ்வில் முட்டி உடைத்தல், யானைக்கு கண் வைத்தல், மிட்டாய் சேகரித்தல், சோடா போத்தலுக்கு வளையம் போடுதல், பனிஸ் சாப்பிடுதல், பலூன் ஊதி உடைத்தல், வினோத உடைப்போட்டி, சாக்கு ஓட்டம், கயிறு இழுத்தல், சங்கீதக் கதிரை போன்ற பல விளையாட்டுக்கள் நடத்தப்பட்டு பரிசில்களும் வழங்கப்பட்டன.









பணிப்பாளர் வைத்திய கலாநிதி இரா. முரளீஸ்வரன் அங்கு உரையாற்றுகையில், "வைத்தியசாலையில் கொவிட் 19 தொற்றினால் தடைப்பட்டிருந்த இவ்வாறான நிகழ்வுகள் மீண்டும் நடைபெறுவது மகிழ்ச்சியாக உள்ளது. அனைவரும் இந்நிகழ்வில் குழுவாக செயற்படுவது மிகவும் சந்தோசமளிக்கிறது" என்றார்.



போட்டிகளில் வெற்றியீட்டிய வீரர்களுக்கான பரிசுக்குரிய பணவவுச்சருக்கான அனுசரணை வழங்கிய கல்முனை ஹற்றன் நெஷனல் வங்கியின் (HNB) முகாமையாளர் தஅல்பர்ட் நிர்மலகுமார் மற்றும் ஏனைய அனுசரணையாளர்களுக்கு டொக்டர் முரளீஸ்வரன் நன்றி தெரிவித்தார்.

மேலும் இந்நிகழ்வின் நிகழ்ச்சிகளை விபத்து மற்றும் அவசர சிகிச்சைப்பிரிவின் பொறுப்பு தாதிய உத்தியோகத்தர் ஜி.சோழவேந்தன் தொகுத்து வழங்கியதோடு, தர முகாமைத்துவ பொறுப்பு தாதிய உத்தியோகத்தர் பி.செல்வகுமார் நிகழ்ச்சிகளுக்கான மேலதிக ஒருங்கிணைப்புகளை வழங்கினார். விளையாட்டுக்களுக்கான நடுவராக இரத்தவங்கியின் பொறுப்பு தாதிய உத்தியோகத்தர் வி.குலேந்திரகுமார் பங்களித்தார். இந்நிகழ்வுகளுக்கான நிதி சேகரித்தலுக்கான பங்களிப்பினை அதிதீவிரசிகிச்சைப்பிரிவின் பொறுப்பு தாதிய உத்தியோகத்தர் என்.பி.. மதுரா ஏற்பாடு செய்திருந்தார்.

வைத்தியசாலையின் வைத்திய நிபுணர்களான மயக்கமருந்து வைத்திய நிபுணர் டொக்டர் மியூரு உதயங்க, குழந்தைநல மருத்துவ நிபுணர்கள் டொக்டர். பிரேமினி மற்றும் டொக்டர்.S.N. ரொஷாந்த், கண் சத்திரசிகிச்சை நிபுணர் டொக்டர் நிரோஷன், மகப்பேற்று வைத்திய நிபுணர் டொக்டர் ரசீன் முகமட் மற்றும் கதிரியக்கவியல் வைத்திய நிபுணர் டொக்டர்.மபா(f)ஷா போன்றோர் விளையாட்டுக்களில் கலந்து கொண்டு தங்களது திறமைகளையும் வெளிக்காட்டியிருந்தமை குறிப்பிடத்தக்கது..

இறுதியாக தரமுகாமைத்துவ பொறுப்பு தாதிய உத்தியோகத்தர் பி.செல்வகுமார் நன்றியுரையுடன் நிகழ்வுகள் முடிவுற்றன.

**வி.ரி.சகாதேவராஜா...**
(காரைதீவு குறூப் நிருபர்)

# கொழும்பு தமிழ்ச்சங்கத்தில் இன்று மாலை கலைஞர் கே.சந்திரசேகரன் நினைவேந்தல்

இலங்கையில் ஆறு தசாப்த காலத்துக்கு மேலாக வானொலி, மேடை, திரைப்படம் எனக் கலைப்பணியாற்றிய கலைஞரும், சின்னத்திரை வரவுக்குப்பின்னர் அதிலும் நீண்டகாலமாகக் கலைப்பணி புரிந்தவருமான கலாபூஷணம், கலைமாமணி கே. சந்திரசேகரன் அவர்களுக்கான நினைவேந்தல் நிகழ்வு கொழும்புத் தமிழ்ச் சங்கத்தில் இன்று 13 ஆம் திகதி சனிக்கிழமை மாலை நடைபெறுகின்றது.



அண்மைக் காலமாகத் தமிழகத்தில் தனது குடும்பத்தினருடன் தங்கியிருந்த சந்திரசேகரன் திடீரெனச் சுகவீனமுற்றநிலையில் வைத்தியமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்தார். அவர் உடல்நிலை தேறி வீடு திரும்பினார். ஆனால், அவரைப் பீடித்த நோய் விடவில்லை. மீண்டும் அவர் உடல்நலம் குன்றியதால் வைத்தியமனைக்குச் செல்ல வேண்டிய நிலைமை ஏற்பட்டது.



அவர் நோயிலிருந்து மீண்டுவருவார் என்று அவரது அன்புத் துணைவியார், குழந்தைகள், உறவினர்கள் எதிர் பார்த்துக் காத்திருக்க கலைஞர் கே.சந்திரசேகரன் மீளாத்துயில் கொண்டார்.

ஆறு தசாப்த காலத்துக்கு மேலான அவரது கலைப்பயணத்தில் அவருடன் இணைந்து பயணித்தவர்களில் அவரது பாடசாலைத் தோழர்களான பீ. எச். அப்துல் ஹமீத், போல்அன்ரனி ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள். கலைஞர் சந்திரசேகரனின் இழப்புத் துயரச் செய்தியை இவர்களிடமிருந்தே மற்றையவர்கள் அறிந்து கொள்ள முடிந்தது.

ஒன்றாகச் சேர்ந்து வானொலியிலும், மேடைகளிலும் கலைப் பணியாற்றி வந்த தமது நண்பரின் இழப்புத் துயரத்தை ஊடகங்கள் வாயிலாகவும் அவர்கள் எடுத்துக் கூறினர்.

கலைஞர் சந்திரசேகரன் அவர்கள் கடந்த ஏப்ரல் 29 ஆம் திகதி தமிழகத்தில் காலமானார். இறுதிக்கிரியைகள் மே 1 ஆம் திகதியன்று தமிழகத்திலேயே நடைபெற்றன.

கலைஞர் கே.சந்திரசேகரனின் இறுதிப் பயணத்தில் இலங்கையில் இருப்பவர்கள் கலந்து கொள்ள முடியாத நிலையில் அவருக்கான ஒரு நினைவேந்தல் நிகழ்வை கொழும்புத் தமிழ்ச்சங்கத்தில் இன்று 13 ஆம் திகதி சனிக்கிழமை ஏற்பாடு செய்துள்ளனர்.

இன்று சனிக்கிழமை மாலை 3.30 இற்கு கொழும்புத் தமிழ்ச் சங்கத்தில் நடைபெறும் 'நினைவேந்தல்' நிகழ்வுக்கு முன்னாள் அமைச்சரும், ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் தலைமை தாங்குகின்றார்.

எங்கள் தேசக் கலைஞர்களை நேசிக்கும் அனைவரும், கலாபூஷணம் கே.சந்திரசேகரனின் நினைவேந்தல் நிகழ்வில் பங்கெடுத்து அவரை கௌரவிக்க வேண்டுமென வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

# சீனாவுக்கு இலங்கைக் குரங்குகளை ஏற்றுமதி செய்யும் யோசனை ஆராயப்பட வேண்டும்!

குரங்குகளிடமிருந்து இந்நாட்டு பயிர்களை பாதுகாப்பதற்காக விவசாயத்துறை அமைச்சர் தற்போது தயாராகி வருகின்றார்.

"சீனா எங்களது குரங்குகளை விலைக்கு வாங்கத் தயார். குரங்குகள் பயிர்களை அழிக்கும் விலங்குகளில் முதலிடத்தில் உள்ளன. அதனால் இந்த விலங்குகளை கட்டுப்படுத்த ஏதேனும் நடவடிக்கை எடுப்பது அவசியம். அது அவசரமான விடயம் என்பதில் சந்தேகம் இல்லை" என்கிறார் அமைச்சர்.

குரங்குகளால் பயிர்களுக்கு எவ்வளவு பாதிப்பு ஏற்பட்டாலும் அதற்குத் தீர்வாக குரங்குகளை ஏற்றுமதி செய்ய எண்ணுவது அவ்வளவு நல்ல விடயமல்ல. விலங்குகளை ஏற்றுமதி செய்வது அமைச்சின் எண்ணம் அல்லவென்றும் சீனா விடுத்த வேண்டுகோள் அது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

சீனா அந்நாட்டில் உள்ள மிருகக்காட்சிசாலைகளுக்காகவே குரங்குகளை கேட்டுள்ளதாக கூறுகின்றார்கள்.

இது குறித்து ஆராய அமைச்சர் குழுவொன்றை அமைச்சர் நியமித்துள்ளார்.

வர்த்தக ரீதியாக விலங்குகள் ஏற்றுமதி செய்வதற்கு எமது சட்டத்தில் இடமில்லை. எந்த விலங்கையாவது ஏற்றுமதி செய்வதற்கு இரண்டு காரணங்கள் மாத்திரமே உள்ளன. ஒன்று அந்த விலங்கினம் அழிந்து போகும் அவதானம் காணப்பட்டால் அதை பாதுகாப்பதற்காகவும், இரண்டாவது மிருக காட்சிசாலைகளுடன் விலங்குகளை பரிமாறிக் கொள்வதற்குமாகும்.

ஆனால் சீனா முதற்கட்டமாக ஒரு இலட்சம் குரங்குகளை பெறுவதற்கு தயாராக உள்ளது.



உலகில் மருந்து உற்பத்தி நடவடிக்கைகளுக்காக மனிதர்கள் அல்லாத பிரமிட்டா ஆய்வு நடவடிக்கைக்கு (NON HUMAN PRIMATE RESARCH) பயன்படுத்துவது உயிரியல் ரீதியாக மனிதருக்கு மிகவும் சமனான குரங்குகள் மந்திகள் போன்ற விலங்குகளையாகும். எமது நாட்டுக்கே உரித்தான குரங்கினமான *Macaca* இனத்திற்கு பெரும் கிராக்கி உள்ளது. உலக சுகாதாரத் தரவுகளுக்கு அமைய அமெரிக்காவின் மருந்து உற்பத்திக்கு பயன்படுத்தப்படும் குரங்குகளில் நூற்றுக்கு 80 வீதத்தை வழங்குவது சீனாவாகும். ஆய்வுகளுக்காக அந்நாட்டில் வளர்க்கப்படும் மிருகப் பண்ணைகளை சீனாவில் காண முடியும். அத்துடன் வேறு நாடுகளில் இருந்தும் சீனாவிற்கு சட்டவிரோதமாகவும் விலங்குகளை கொண்டு வருகின்றார்கள் .

எவ்வாறாயினும் கொவிட் தொற்று ஆரம்பமான இடம் வுஹான் விலங்கு சந்தை என விசாரணைகள் மூலம் தெரியவந்ததால் வுஹான் போன்ற விலங்கு சந்தைகள் மாத்திரமல்ல ஆய்வுக்காக விலங்குகளை வளர்க்கும் விலங்கு பண்ணைகள் தற்காலிகமாக மூடப்பட்டதோடு விலங்குகளையோ விலங்குபாகங்களையோ இறக்குமதி செய்யும் நடவடிக்கையும் நிறுத்தப்பட்டது.

சீனா எமது நாட்டிலிருந்து இலட்சக்கணக்கில் குரங்குகளை இறக்குமதி செய்ய முனைவது அவ்வாறு பாதிப்படைந்த ஆய்வுத் திட்டத்தை மீண்டும் உருவாக்குவதற்காகவா என்ற வினா மக்கள் மத்தியில் உள்ளது.

தற்போது தன்சானியாவில் சிறை வைக்கப் பட்டுள்ள 74 வயதான யங் பென் என்னும் சீனப் பெண்மணி யானைத்தந்தங்களின் அரசி என்ன விளிக்கப்படுகின்றார்.

இவர் தன்சானியாவில் மாத்திரம் அல்ல உலகிலேயே யானை தந்த கடத்தல்காரியாவார். 2019 ஆம் ஆண்டு தன்சனியா அவரை கைது செய்து அவருக்கு 15 வருடகால சிறைத் தண்டனை விதித்தது. 2009 தொடக்கம் 2014 வரையான காலப்பகுதியில் அந்நாட்டின் யானைகளின் எண்ணிக்கை நூற்றுக்கு 60% குறைந்த பின்னர் மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பிலேயே அவர் கைது செய்யப்பட்டார்.

குரங்குகளை ஏற்றுமதி செய்வது போன்ற முடிவுகள் அவ்வாறான கொடூரமான வியாபாரத்தை மேற்கொள்ள வழிவகுக்க காரணமாகலாம்.

## மத்திய வங்கியின் மூலமாக... 03ஆம் பக்கத் தொடர்

அதனால், நடைமுறைக் கட்டமைப்பில் பல முரண்பாடுகள் உருவாகியுள்ளன.

ஏழ்மை நிலை மக்களை இலக்காகக் கொண்டு சமுர்த்தி வங்கித் திட்டம் ஆரம்பிக்கப்பட்ட போதிலும், அதன் நோக்கம் உண்மையில் முறையாக முன்னெடுக்கப்படுகின்றதா என்பது கேள்விக்குறியாகவே உள்ளது.

## கைதான சந்தேக நபருக்கு... 03ஆம் பக்கத் தொடர்

கடந்த செவ்வாய்க்கிழமை (09) அதிகாலை கைது செய்து, களுத்துறை நீதவான் நீதிமன்றத்தில் கடந்த புதன்கிழமை (10) ஆஜர்படுத்தினர். இதன்போது, சந்தேகநபரை 48 மணி நேரம் தடுத்துவைத்து விசாரணை செய்ய நீதிமன்றம் அனுமதி வழங்கியது. இதனைத் தொடர்ந்து, சந்தேகநபரை நேற்று (12) நீதிமன்றத்தில் ஆஜர்படுத்திய போதே, இந்த விளக்கமறியல் உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.

## இம்ரான் கானுக்கு... 03ஆம் பக்கத் தொடர்

இஸ்லாமாபாத் உயர் நீதிமன்றத்தில் இம்ரான் கான் ஆஜரானார். அவரின் பிணை மனுவை ஆராய்ந்த நீதிமன்றம் 02 வார காலத்துக்கு இம்ரான் கானுக்கு பிணை வழங்கி உத்தரவிட்டது.

## போதைப்பொருள்... 03ஆம் பக்கத் தொடர்

எடுப்பதற்கு பயன்படுத்தியதாகவும் சிறுமியிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

இந்தப் பெண், ஹெரோயின் போதைப்பொருளுக்காக யாசகம் எடுப்பதற்கு சிறுமியை அழைத்துச் சென்றதை பொலிஸார் கண்டுபிடித்துள்ளனர்.

சிறுமியின் வாய், உதடுகள், இடது காலின் முழங்காலுக்கு மேல் மற்றும் இரு கால்களின் பெருவிரல்களிலும் தீக்காயங்கள் காணப்பட்டதையும் பொலிஸார் அவதானித்துள்ளனர்.

இந்நிலையில், சிறுமிக்கு சிகிச்சை அளித்த பின் அவரிடம் வாக்குமூலம் பதிவு செய்யப்படவுள்ளதாகவும், பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

உடலில் காயங்கள் காணப்படும் நிலையில் சிறுமி சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டிருக்கலாமென்றும், பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## லண்டனில் இலங்கை தமிழ்...

வீதியில் நடந்துள்ளது. ஆப்கானிஸ்தான் அகதியான 16 வயதுடைய ரிஷ்மீத் சிங் என்பவர் பூங்காவில் நண்பர்களுடன் இருந்த போது இந்த இளைஞர்களால் கொல்லப்பட்டுள்ளார். இந்த வழக்கில் இலங்கைத் தமிழரான 18 வயதுடைய வனுஷன் பாலகிருஷ்ணன் மற்றும் இல்யாஸ் சுலைமான் ஆகிய இருவருக்கு ஆயுள் தண்டனை வழங்கி நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

இதன்படி, வனுஷன் பாலகிருஷ்ணனுக்கு 24 ஆண்டுகளும் சுலைமானுக்கு 21 ஆண்டுகளும் சிறைத்தண்டனை உறுதி செய்யப்பட்டுள்ளது.

தலிபான்களின் அச்சுறுத்தல் காரணமாக ஆப்கானிஸ்தானிலிருந்து வெளியேறிய ரிஷ்மீத்தும் அவரது தாயாரும் பிரிட்டனில் தஞ்சம் கோரியிருந்தமை நீதிமன்ற விசாரணையில் தெரியவந்துள்ளது.

## மாத்தறையில் இந்திய...

உற்பத்தி, சுகாதாரத் திணைக்களத்துக்கும் அவர்கள் அறிவித்துள்ளனர். அரச வர்த்தகக் கூட்டுத்தாபனத்தினால் இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட முட்டைகளை பேக்கரி உற்பத்திகளுக்காக மாத்திரம் வழங்குவதற்கு கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களம் அனுமதி வழங்கியிருந்தது.

## அரசின் வருவாய், ...

மற்றும் செலவுகள் மேலும் எந்தளவு தொகை தேவைப்படுகிறது என்பது போன்ற விபரங்களை அனைவரும் அறிந்துகொள்ள முடியும் என்றும், அவர் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று நாட்டின் தற்போதைய பொருளாதார நிலைமை தொடர்பில் கருத்துகளை முன்வைத்த போதே, அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார். அது தொடர்பில் மேலும் தெரிவித்த அமைச்சர்,

"நாட்டில் எந்த அரசாங்கம் ஆட்சியில் இருந்தாலும், நிதி அமைச்சராக யார் பதவி வகித்தாலும், செலவினங்களை எதிர்கொள்வது தவிர்க்க முடியாததாகும். அதேபோன்று, சமுர்த்தி மற்றும் நிவாரண கொடுப்பனவுகளை மாதாந்தம் வழங்க வேண்டியதும் அவசியமாகும். அரசியலமைப்பின் 148ஆவது சரத்துக்கு இணங்க நிதி அதிகாரம் முழுமையாக பாராளுமன்றத்திடமே காணப்படுகிறது.

திறைசேரி அன்றாடம் எதிர்கொள்ளும் நிதி பிரச்சினை தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு எந்த ஒரு புரிந்துணர்வும் காணப்படவில்லை.

## இலங்கைக்கு கடத்தவிருந்த...

காணப்பட்ட இரண்டு கஞ்சா வர்த்தகர்களை மதுரை நகர பொலிஸார் தேடி வந்ததாகவும் தெரிவித்தனர்.

இரகசியத் தகவலின்படி, கீரைத்துறையிலிருந்து வந்த பொலிஸார், வாகனங்களை சோதனை செய்த போது, வாகனத்தில் 40 கிலோகிராம் கஞ்சாவைக் கண்டுபிடித்ததுடன், ஒருவரைக் கைது செய்தனர்.

அவரிடம் நடத்திய விசாரணையில், சாத்தான்குளம் அருகேயுள்ள பண்ணையொன்றில் 2 ஆயிரம் கிலோகிராம் கஞ்சா பதுக்கி வைத்திருப்பதாகத் தெரிவித்துள்ளார். அப்பண்ணையை சோதனையிட்டதில், பிக்அப் வேனில் கடத்தப்பட்ட பொருட்களைக் கண்டுபிடித்தனர்.

மேலும், மூன்று வாகனங்களிலிருந்து எட்டு மொபைல் போன்கள், வைஃபை மற்றும் பணம் ஆகியவற்றை பொலிஸார் பறிமுதல் செய்துள்ளனர். அவர்கள் மீது போதைப்பொருள் மற்றும் மனநோய் பொருட்கள் சட்டத்தின் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது.

## குருநாகல் வைத்தியசாலை...

வைத்தியரை தாக்கிய சம்பவம் தொடர்பாக கிடைத்த முறைப்பாட்டின் பிரகாரம், பொலிஸார் விசாரணையை ஆரம்பித்திருந்தனர்.

இந்நிலையில், தம்புள்ளை பிரதேசத்தில் காரில் பயணித்துக்கொண்டிருந்த இந்தச் சந்தேக நபரை குருநாகல் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

## இலங்கை ரூபாவின்...

டொலரொன்றின் கொள்முதல் விலை 306.38 ரூபாவாகவும் விற்பனை விலை 320.03 ரூபாவாகவும் பதிவாகியது. நேற்று முன்தினம் (11) நாணய மாற்று விகிதத்தின் அடிப்படையில், அமெரிக்க டொலரொன்றின் கொள்முதல் விலை 308.66 ரூபாவாகவும் விற்பனை விலை 322.70 ரூபாவாகவும் பதிவாகியிருந்தது. அத்துடன், யூரோ, பிரிட்டிஷ் பவுண்ட்ஸ், சுவிஸ் ப்ரேங்க் உள்ளிட்ட நாணயங்களுக்கு நிகரான இலங்கை ரூபாவின் பெறுமதியிலும் நேற்று கணிசமான அதிகரிப்பு காணப்பட்டது.

## சீமெந்து விலைகள்...

விற்பனை செய்யப்படுகிறது.

மேலும், வீட்டுக்கடன் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதால், சீமெந்துக்கான கேள்வி தற்போது 50 சதவீதத்தால் குறைவடைந்துள்ளதாக, சீமெந்து உற்பத்தியாளர்கள் தெரிவித்தனர். இதன் காரணமாக, நாட்டின் முன்னணி சீமெந்து உற்பத்தி நிறுவனமொன்று தனது நான்கு தொழிற்சாலைகளில் மூன்றை மூடியுள்ளதாக தெரியவந்துள்ளது.

## யானை தாக்கியதில் ...

இளைஞனொருவரும் யுவதியொருவரும் காட்டு யானையின் தாக்குதலுக்குள்ளாகியதில், யுவதி சம்பவ இடத்தில் உயிரிழந்துள்ளார்.

நேற்று முன்தினம் (11) நள்ளிரவு இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் படுகாயமடைந்துள்ள இளைஞர், கொஸ்லாந்தை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர், மேலதிக சிகிச்சைக்காக தியத்தலாவை வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

குருநாகல், வாரியபொல பிரதேசத்தைச் சேர்ந்த 22 வயதுடைய இந்த இளைஞரும் மாத்தறை பிரதேசத்தைச் சேர்ந்த 23 வயதுடைய இந்த யுவதியும் உடதியலும பிரதேசத்திலுள்ள நீர்வீழ்ச்சிப் பகுதிக்கு சுற்றுலா வந்து அங்கு கூடாரம் அமைத்து தங்கியுள்ளனர்.

உயிரிழந்த யுவதியின் சடலம், நீதவான் பரிசோதனைக்காக சம்பவ இடத்தில் வைக்கப்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் தொடர்பில் கொஸ்லாந்தை பொலிஸார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

## அரசின் நலன்புரி...

தரப்படுத்தலுக்கமைய, 22 இலட்சம் குடும்பங்களுக்கு இந்த நலன்புரி கொடுப்பனவுகளை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும், அவர் தெரிவித்தார். கொடுப்பனவை பெற்றுக்கொள்ளும் பயனாளிகள் எந்தவொரு வங்கியூடாகவும் அவர்களது வைப்புக் கணக்குகள் மூலம் அதனை பெற்றுக்கொள்ள முடியுமெனவும், இராஜாங்க அமைச்சர் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற 'அஷ்வசும' நலன்புரி கொடுப்பனவுத் திட்டம் தொடர்பான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்து உரையாற்றிய அவர்,

"அரசாங்கத்தினால் வழங்கப்படவுள்ள நலன்புரி கொடுப்பனவுகள் தொடர்பில் மக்கள் மத்தியில் கடும் அதிருப்தி நிலவுகிறது. நிவாரணம் பெறத் தகுதியுள்ளவர்கள், அரசியல் நோக்கங்கள் காரணமாக நீக்கப்படுவதும் தகுதியற்றவர்களுக்கு நிவாரணங்கள் வழங்கப்படுவது தொடர்பிலேயே அந்த அதிருப்தி காணப்படுகிறது. சர்வதேச மட்டத்திலும் ஒரு குற்றச்சாட்டாக இது முன்வைக்கப்பட்டு வருகிறது.

இந்த நலன்புரி கொடுப்பனவுகள் வழங்கப்படுவது தொடர்பில் சர்வதேச நாணய நிதியத்துடனான பேச்சுவார்த்தையின் போது, பிரதான விடயமாக சுட்டிக்காட்டப்பட்டது.

## எயார் சைனா விமான ...

விமான சேவைகளை இயக்குமெனவும், அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ தெரிவித்தார்.

## A/L விடைத்தாள் மதிப்பீடுகள்...

மேலும் 6 பாடங்களுக்கான பரீட்சை விடைத்தாள்களை மதிப்பீடு செய்யும் பணி ஆரம்பமாகியுள்ளதுடன், ஏனைய பாடங்களுக்கான பரீட்சை விடைத்தாள் மதிப்பீட்டுப் பணிகளை அடுத்த வாரமளவில் ஆரம்பிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. நாடு முழுவதும் 10 மத்திய நிலையங்களில் இந்த நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும், அவர் தெரிவித்தார்.

இதேவேளை, எதிர்வரும் 29ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள கல்விப் பொதுத் தராதர சாதாரணதரப் பரீட்சைக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் உயர்தரப் பரீட்சையின் விடைத்தாள் மதிப்பீட்டுப் பணிகளை முன்னெடுக்கப்படுமெனவும், பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் தெரிவித்தார்.

அத்துடன், பாடசாலைகளில் கற்பித்தல் செயற்பாடுகளுக்கு இடையூறு ஏற்படாத வகையில் ஆசிரியர்களை அதற்காக பயன்படுத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது.

விடைத்தாள்கள் மதிப்பீட்டின் போது, செயன்முறை பரீட்சைகளுக்கு தேவையான ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்படுமென, அமித் ஜயசுந்தர தெரிவித்தார். 2022ஆம் ஆண்டுக்கான கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சை கடந்த ஜனவரி மாதத்தில் நடைபெற்றதுடன், இதன் பின்னர் விடைத்தாள் தொடர்பான மதிப்பீட்டுப் பணிகளை பெப்ரவரி 22ஆம் திகதி ஆரம்பிக்கவிருந்த போதிலும், பல்கலைக்கழக விரிவுரையாளர்களின் வேலைநிறுத்தம் மற்றும் ஆசிரியர்கள் விண்ணப்பிக்காத காரணத்தினால் இவ்வருட உயர்தரப் பரீட்சைக்கான மதிப்பீடுகள் இரண்டரை மாதங்களுக்கும் மேலாக தாமதமாகியமை குறிப்பிடத்தக்கது.

## Mocha சூறாவளியின் தாக்கம்;...

பெய்யக்கூடிய வாய்ப்புள்ளதுடன், வடக்கு, வடமத்திய மாகாணங்கள் உள்ளிட்ட மேலும் சில பிரதேசங்களில் மாலை வேளையில் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யலாமெனவும், வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்தது.

மேல், தென் கடற்பிராந்தியங்களிலும் மத்திய மலை நாட்டின் மேற்கு சரிவுப் பகுதிகளிலும் மணிக்கு 40 முதல் 45 கிலோமீற்றர் வேகத்தில் காற்று வீசக்கூடுமெனவும், அத்திணைக்களம் தெரிவித்தது.

ஆகையினால், மின்னல் தாக்கம் மற்றும் பலத்த காற்றினால் ஏற்படக்கூடிய அனர்த்தங்களிலிருந்து பாதுகாப்பு பெற்றுக்கொள்ளும் வகையில் முன்னெச்சரிக்கையுடன் நடந்துகொள்ளுமாறும் பொதுமக்களுக்கு வளிமண்டலவியல் திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது.

இதேவேளை, வங்காள விரிகுடாவில் ஏற்பட்டுள்ள சூறாவளியால் வடக்கு மற்றும் கிழக்கு கடற்பிராந்தியங்களுக்கு செல்ல வேண்டாமெனவும் மீனவர்களுக்கு வளிமண்டலவியல் திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது.

இதற்கிடையில், பலத்த மழை காரணமாக அத்தனகலு ஓயா, களனி கங்கை, களு கங்கை மற்றும் கிங் கங்கை ஆகியவற்றின் நீர்மட்டம் உயர்ந்துள்ளதுடன், இதனால் ஆறுகளின் இருமருங்குகளிலும் வசிக்கும் மக்களை மிகுந்த எச்சரிக்கையுடன் இருக்குமாறும், நீர்ப்பாசனத் திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது.

## பாடசாலைகளுக்கு 27 முதல்...

பரீட்சையின் நிமித்தம் இந்த தீர்மானம் எடுக்கப்பட்டிருந்தது.

பின்னர் மே மாதம் 25ஆம் திகதி முதல் ஜுலை மாதம் 20ஆம் திகதி வரையில் முதலாம் தவணையின் மூன்றாம் கட்ட கல்வி நடவடிக்கள் நடைபெறும் என்றும் அறிவிக்கப்பட்டது.

எவ்வாறாயினும் கல்விப் பொதுத்தராதர சாதாரண தரப் பரீட்சைகள் இரண்டு வாரங்களுக்கு ஒத்திவைக்கப்பட்டன.

இதன்படி மே மாதம் 29ஆம் திகதி இந்த பரீட்சைகள் நடத்தப்படும் என்று கல்வி அமைச்சு அறிவித்துள்ளது. இந்நிலையில் இன்று வழங்கப்படுமென அறிவிக்கப்பட்ட பாடசாலை விடுமுறைகள் இரத்துச் செய்யப்பட்டன.

பரீட்சைகள் 29ஆம் திகதி ஆரம்பமாகின்றமையால், பரீட்சை நடைபெறும் காலப்பகுதியில் விடுமுறை வழங்குவதா? இல்லையா? என்பது குறித்து ஆலோசிக்கப்பட்டு வந்தது.

இவ்வாறான பின்னணியில் பாடசாலைகளுக்கான விடுமுறை தொடர்பான முக்கியத் தீர்மானமொன்று கல்வி அமைச்சினால் நேற்று மேற்கொள்ளப்பட்டது.

இதன்படி, இம்மாதம் 27ஆம் திகதி முதல் ஜூன் மாதம் 11ஆம் திகதி வரையில் விடுமுறை வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளதாக, கல்வி இராஜாங்க அமைச்சர் அ.அரவிந்தகுமார் தெரிவித்துள்ளார். இதற்கிடையில் ஏற்கனவே காலதாமதமாகியுள்ள கல்விப் பொதுத் தராதர சாதாரணத் தரப் பரீட்சைகள் திட்டமிட்டபடி 29ஆம் திகதி நடைபெறுமா? என்ற சந்தேகம் பல்வேறு தரப்பினரிடையே ஏற்பட்டுள்ளது.

இந்த ஆண்டின் ஆரம்பத்தில் நடைபெற்ற உயர்தரப் பரீட்சைகள் விடைத்தால் மதிப்பீட்டு பணிகளில் ஏற்பட்டுள்ள தாமதமே இதற்கான காரணம். இது குறித்து ஏற்கனவே பதிலளித்துள்ள கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜெயந்த, கண்டிப்பாக நிர்ணயிக்கப்பட்ட திகதியில் பரீட்சைகள் அரம்பமாகுமென்றும் அறிவித்துள்ளார்.

## தமிழ் அரசியல் கைதிகளை...

"ஜனாதிபதியுடனான சந்திப்பில் வனவளத் திணைக்களம் கைப்பற்றியுள்ள காணி தொடர்பாக ஜனாதிபதியிடம் எடுத்துக் கூறப்பட்டது. இந்நிலையில், 1985ஆம் ஆண்டுக்கு பின்னர் வனவளத் திணைக்களத்தினால் கையகப்படுத்தப்பட்ட காணிகளை மக்களின் தேவைகளுக்கு விடுவிக்க ஜனாதிபதி இணக்கம் தெரிவித்தார்.

இராணுவ வசமுள்ள தமிழ் மக்களுடைய காணிகளை விடுவிப்பது, சிறைகளில் நீண்டகாலமாக தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளில் எஞ்சியோரை விடுவிப்பது தொடர்பாகவும் இங்கு கலந்துரையாடப்பட்டது. இதன்போது, சட்ட மாஅதிபர் சஞ்சய் இராஜரட்ணம் மற்றும் நீதி அமைச்சர் விஜேயதாச ராஜபக்ஷவிடம் சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் தொடர்பாக ஜனாதிபதி கேள்வி எழுப்பினார்.

இதற்குப் பதிலளித்த நீதி அமைச்சர் விஜேயதாச ராஜபக்ஷ, பெரும்பாலான தமிழ் அரசியல் கைதிகள் விடுவிக்கப்பட்டுள்ளதாகவும் எஞ்சியோரை விடுவிப்பதற்கான சட்ட நடவடிக்கைகளை எடுத்து வருவதாகவும் தெரிவித்தார்.

அத்துடன், பௌத்த மயமாக்கல் தொல்பொருள் திணைக்களம் என்ற போர்வையில் தமிழ் மக்களுடைய காணிகள் அபகரிப்பது தொடர்பாக ஜனாதிபதியிடம் தெரிவிக்கப்பட்டது.

காணிகள் தொடர்பாக ஆராய்வதற்காக ஒவ்வொரு மாகாணத்திலும் குறைகேள் அதிகாரி (ஒம்புட்ஸ்மன்) ஒருவரை நியமித்து ஆராய்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதியைக் கேட்டிருந்தேன். அது சிறந்த யோசனை, அவ்வாறு செய்வதாகத் ஜனாதிபதி தெரிவித்தார்.

இவை உட்பட மேலும் பல்வேறுபட்ட பிரச்சினைகள் தொடர்பாக ஜனாதிபதியுடன் கலந்துரையாடப்பட்டது.

இந்தச் சந்திப்பு பெரிதாக நன்மை பயக்கா விட்டாலும், சில விடயங்களில் ஆறுதல் அடையக் கூடியவாறு இருந்தது" என்றார்.

## அரசின் நலன்புரி கொடுப்பனவுகள் தோட்டத் தொழிலாளருக்கும்...

நலன்புரி கொடுப்பனவு பட்டியலில் இணைத்துக்கொள்ளப்படாதவர்கள் எதிர்வரும் ஜுன் மாதத்திலும் அதற்காக விண்ணப்பிப்பதற்கு அவகாசம் வழங்கப்படுமென்றும் சபையில் அவர் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற அரசாங்கத்தின் நலன்புரி கொடுப்பனவு தொடர்பான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே, அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் தொடர்ந்து உரையாற்றிய அவர்,

"தோட்டத் தொழிலாளர்கள் அரசாங்கத்தின் இந்த நலன்புரி கொடுப்பனவுத் திட்டத்திலிருந்து விலக்கப்படுவார்களென ஓர் அச்சம் தோற்றுவிக்கப்படுகிறது. மக்கள் அது தொடர்பில் வீண் அச்சம் கொள்ளத் தேவையில்லை.

மலையக பெருந்தோட்டப் பகுதியில் அனைத்து மாவட்டங்களிலும் நாம் அது தொடர்பான மதிப்பீடுகளை மேற்கொண்டுவருகின்றோம். அந்தவகையில், நுவரெலியா மாவட்டத்திலிருந்து 80 ஆயிரத்துக்கும் மேற்பட்ட விண்ணப்பங்கள் கிடைத்துள்ளன. அந்த 52.5 வீதமான விண்ணப்பங்கள் தோட்டப்புறங்களிலிருந்தே கிடைத்துள்ளன. ஏனைய மாவட்டங்களிலும் நாம் புள்ளி விபரங்களை சேகரித்து வருகின்றோம். விரைவில் அது தொடர்பில் நாம் பகிரங்கமாக அறிவிப்போம்.

இதற்கு முன்னர் அரசாங்கத்தினால் வழங்கப்பட்டு வந்துள்ள நிவாரணங்கள் எதுவும் மலையக மக்களுக்கு முறையாக கிடைக்கவில்லையென்பதை ஏற்றுக்கொள்கின்றோம். அப்பகுதி கிராம சேவை அதிகாரிகளே அதற்கு முக்கிய காரணம். அவர்கள் சட்டத்தில் காணப்படும் ஓட்டையை பாவித்து மலையக மக்களை வேண்டுமென்றே ஒதுக்கியிருக்கின்றார்கள்.

கடந்த காலங்களில் 5,000, 10,000 ரூபாவென கொடுப்பனவுகள் வழங்கப்பட்ட போது, அது தொடர்பில் நாம் ஆராய்ந்து பார்த்தோம். அதில் குறிப்பாக வேலையற்று உள்ளவர்களே வறுமைக் கோட்டின் கீழ் உள்ளவர்களெனக் கணிப்பிடப்பட்டுள்ளது.

தற்போது ஒரு இலட்சத்து 35 ஆயிரம் பேர் தோட்டங்களில் தம்மை பதிவு செய்து வேலை செய்து கொண்டிருக்கின்றார்கள். அவர்கள் தொழில் செய்வதால், அவர்களுக்கு வறுமை கிடையாதெனக் காரணம் காட்டி சட்டத்திலுள்ள ஓட்டையைப் பாவித்து அவர்கள் ஒதுக்கப்பட்டுள்ளார்கள். அது தொடர்பில் நாம் ஜனாதிபதிக்கும் அறிவித்துள்ளோம். அது தொடர்பில் மலையகத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் எதிர்க்கட்சியினரும் ஜனாதிபதியின் கவனத்துக்கு கொண்டு வந்துள்ளார்களென நான் நம்புகின்றேன்.

உலக வங்கியின் திட்டத்தின் கீழ் நாம் மேற்கொண்டுள்ள கணக்கின்படி, தற்போது வறுமை நிலை குடும்பங்களை பதிவிடும் நடவடிக்கைகள் முறையாக முன்னெடுக்கப்படுகின்றன. அதனால், அது தொடர்பில் தோட்டத்துறை மக்கள் அச்சம் கொள்ளத் தேவையில்லை.

அவ்வாறு மலையக பெருந்தோட்டப் பகுதியில் இந்த நலன்புரி கொடுப்பனவு பட்டியலில் இடம்பெறாதவர்கள் எதிர்வரும் ஜுன் மாதம் அதற்காக புதிதாக விண்ணப்பிப்பதற்கு அவகாசம் வழங்கப்பட்டுள்ளது. அதன் மூலம் அவர்கள் கொடுப்பனவுகளை பெற்றுக்கொள்ளும் தகுதியுடையவர்களாக முடியும்.

## அடுத்த பத்து வருடங்களில் ...

இக்கண்காட்சியை அனைவரும் இலவசமாக பார்வையிடலாம்.

'Sri Lanka Skills Expo 2023 கண்காட்சியின் ஊடாக நாட்டின் பல்வேறு துறைகளுக்கும் கொள்கை தயாரிப்பாளர்களுக்கும் கருத்துகளை பரிமாறிக் கொள்வதற்கான வாய்ப்புகள் உருவாகும் என்பதோடு, துறைசார் திறன் விருத்தியினூடாக நாட்டின் அபிவிருத்திக்கும் வலுவானதொரு பங்களிப்பை வழங்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

'Sri Lanka Skills Expo 2023 கண்காட்சியை பார்வையிட்ட ஜனாதிபதி கண்காட்சியை பார்வையிட வந்தவர்களோடும் கலந்துரையாடினார்.

தொழில்நுட்ப விவசாய வேலைத்திட்டத்திற்கான இணையத்தளத்தை அங்குரார்ப்பணம் செய்யும் நிகழ்வும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் இடம்பெற்றதோடு, தொழில்நுட்ப விவசாயக் செயற்பாடுகளை வலுப்படுத்தும் வகையிலான் ட்ரோன் பாவனையை ஊக்குவிக்கும் விதமாக ட்ரோன் தொழில்நுட்பவியலாளர்கள் மூவருக்கு சின்னங்கள் அணிவிக்கப்பட்டன.

இங்கு மேலும் கருத்து தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க,

"இங்கு ஏற்பாட்டு பணிகளை முன்னெடுத்த மாணவர்களுக்கும் நன்றிகளை தெரிவிக்கிறேன். கடந்த வருடத்தை திரும்பி பார்க்கின்ற போது இவ்வாறானதொரு கண்காட்சியை நடத்த எம்மால் முடியுமா என்பது கேள்விக்குறியாகியிருந்தது. குழப்பகரமான சூழலில் முடங்கிக் கிடந்த நாட்டை மீண்டும் கட்டியெழுப்பும் வேலைத்திட்டத்தை நாம் ஆரம்பித்துள்ளோம்.

நாம் புதிய வரவு செலவுத் திட்டம் ஒன்றை தயாரிக்க வேண்டியது அவசியமாகிறது. அதேபோல் எமது செலவுகளையும் நாம் உரிய முறையில் முகாமைத்துவம் செய்திருக்கலாம். கடந்த பத்து வருடங்களில் நமது செலவினங்கள் தொடர்பில் பார்கின்ற போது, நாம் கல்விக்கு பணம் ஒதுக்கீடு செய்யாமல் சில அரச நிறுவனங்களுக்கே அதிகமாக பணம் ஒதுக்கீடு செய்துள்ளோம் என்பதை கண்டுகொண்டேன்.

நாம் ஸ்ரீ லங்கன் விமான சேவை, பெற்றோலியக் கூட்டுத்தாபனம் ஆகியவற்றுக்கு செலவிட்ட பணத்தை கல்விக்கும் சுகாதாரத்திற்கும் செலவிட்டிருந்தால் தெற்காசியாவின் மிகச்சிறந்த கல்வித்துறையை கொண்ட நாடுகளுடன் போட்டியிடும் நிலையை அடைந்திருப்போம். அவை ஒன்றையும் நாம் செய்யாமையால் இன்று கடன்களை செலுத்தி முடிக்க வேண்டிய நிலை நமக்கு உருவாகியுள்ளது. அடுத்த பத்து வருடங்களில் விரைவாக கடன்களை செலுத்தி முடிக்கவே நான் முயற்சிக்கிறேன்.

நாட்டிற்கு பயனற்ற பல்வேறு வேலைத்திட்டங்கள் காணப்பட்டன. அவ்வாறான திட்டங்களுக்கு வழங்கிய நிதிக்கு என்ன ஆனது என்பது இன்று வரையிலும் மர்மமாகவே உள்ளது. அவ்வாறான செலவுகளையே நாம் முதலில் கட்டுப்படுத்த வேண்டியுள்ளது. அதற்காக நாம் அத்தியாவசியமற்ற சேவைகளை முதலில் கட்டுப்டுப்படுத்த வேண்டியது அவசியமாகும்.

அதற்காக அத்தியாவசிய சேவைகளுக்கான செலவீனங்கள் மட்டுப்படுத்தப்படாது. எதிர்காலத்தில் கல்வி, சுகாதாரம், சமூக பாதுகாப்பு, வீடமைப்பு ஆகிய விடயங்களுக்காக மாத்திரம் சலுகை வழங்கல் செயற்பாடுகளை மட்டுப்படுத்த நாம் எதிர்பார்த்துள்ளோம்.

அதேபோன்று, நாட்டுக்கு நல்ல கல்வி முறையொன்று அவசியம். இந்தக் கல்வி முறையில் மிக முக்கியமான விடயம் பிள்ளைகளுக்குத் தேவையான அறிவை வழங்குவது. நாம் அறிவை அடிப்படையாகக் கொண்ட சமூகத்தில் வாழ்கிறோம். அனைவருக்கும் தேவையான அறிவை வழங்க முடிந்தால், நாட்டின் எதிர்கால வளர்ச்சி உறுதி செய்யப்படும்.

இலங்கை, அறிவு சார்ந்த பொருளாதாரத்தை உருவாக்கக்கூடிய நாடாகும். எனவே, அறிவை வழங்குவதற்கான திட்டங்களை வகுக்க வேண்டும். பாடசாலைக் கல்வியை வழங்கிய பின், தொழில் தகைமையை வழங்குவதற்கான ஏற்பாடுகளையும் செய்ய வேண்டும். இன்று பல அமைப்புகள் அந்தப் பணியில் ஈடுபட்டுள்ளன.

இன்றைய தேவைக்கேற்ப நமது கல்விமுறை நவீனமயப்படுத்தப்படவில்லை. அதனால் நாம் 1015 ஆண்டுகள் பின் தங்கி இருக்கிறோம். நாம் இப்போது புதிதாக சிந்தித்து முன்னோக்கிச் செல்ல வேண்டும். இந்த அறிவை வழங்குவதற்கு தேவையான பயிற்சியை அரசாங்கத்தால் மாத்திரம் வழங்க முடியாது. அந்த பயிற்சி மற்றும் அறிவு பெரும்பாலானவை அரசாங்கத்திற்கு வெளியே உள்ளன. இந்த அறிவை வழங்கக்கூடிய தனியார் மற்றும் வெளிநாட்டு நிறுவனங்களுடன் நாம் இணைந்து பணியாற்ற வேண்டும்.

இந்தப் பணியை முறையாகச் செயல்படுத்துவதற்காக, இந்தமுறை கல்வி அமைச்சை ஒரு அமைச்சருக்கு வழங்கினோம். இந்த முழுமையான பொறிமுறையிலும் அவர் கவனம் செலுத்தி, அதற்கான திட்டங்களைத் தயாரிக்க வேண்டும். கல்விக்காக நாம் தனி அமைச்சரவைக் குழுவை நியமித்துள்ளோம். எனவே கல்வியின் நவீனமயமாக்கலை இங்கிருந்து தொடங்குவோம். நாம் ஒரு புதிய உலகத்தை நோக்கி நகர்கிறோம்.

இன்னும் பத்து ஆண்டுகளில் நமது கல்வி முறையில் மாற்றம் ஏற்படும். ஏனென்றால், கண்ணுக்குத் தெரியாத எதிர்காலத்திற்காக நாம் கல்வியை உருவாக்க வேண்டும். அதற்கான பலமான வேலைத்திட்டம் தேவை. இளைஞர்களுக்கு இது பற்றி முறையாகத் தெளிவுபடுத்தி, எதிர்காலத்திற்குத் தேவையான அறிவும் திறமையும் கொண்ட ஒரு பரிபூரண சமுதாயத்தை உருவாக்குவதே எனது எதிர்பார்ப்பு ஆகும். அதற்குத் தேவையான நிதியை 2024ஆம் ஆண்டு முதல் வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன" என்றார்.

கல்வி அமைச்சர் கலாநிதி சுசில் பிரேமஜயந்த, தொழிலாளர் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார, பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன், இலங்கைக்கான ஜப்பான் தூதுவர் மிசுகோஷி ஹிடேகி, கல்வி அமைச்சின் செயலாளர் நிஹால் ரணசிங்க, பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் (ஓய்வுபெற்ற) ஜெனரல், கமல் குணரட்ண மற்றும் வெளிநாட்டு தூதுவர்கள் மற்றும் அரச அதிகாரிகள் உள்ளிட்ட அதிதிகள் பலர் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

## காணாமல் போன யுவதி ...

பேச்சாளர், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார். கம்பளை பிரதேசத்தில் வசித்து வந்த 22 வயது பாத்திமா முனவ்வரா என்ற யுவதி தனது பணியிடத்துக்குச் சென்றுகொண்டிருந்த போது, கடந்த ஞாயிற்றுக்கிழமை காணாமல் போயிருந்தார்.

சம்பவம் தொடர்பில் 24 வயதான சந்தேகநபர்ஒருவரை நேற்று (12) பொலிஸார் கைது செய்துள்ளனர். சந்தேகநபர், யுவதியை காட்டுப் பகுதிக்கு இழுத்துச் சென் று கொலை செய்து புதைத்ததாக அவர் வாக்குமூலம் வழங்கியுள்ளதாக, பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார்.

சடலத்தை புதைத்ததாக சந்தேக நபர் வாக்குமூலம் அளித்த போதிலும், சடலம் இதுவரை கண்டுபிடிக்கப்படவில்லையென, அவர் மேலும் தெரிவித்தார்.

க ம்பளையிலுள்ள மருந்தகமொன்றில் பணி புரியும் யுவதி கடந்த ஞாயிற்றுக்கிழமை காலையில் வேலைக்குச் செல்வதற்காக வீட்டை விட்டு வெளியேறிய தினம் முதல் காணாமல் போயிருந்தார்.

இது தொடர்பாக சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட நபரை விசாரணை செய்த போதே இத்தகவல்கள் தெரியவந்துள்ளன.

சந்தேக நபர் அப்பகுதியில் ஆடு வளர்த்து வருவது தெரியவந்தது. ஆடுகளுக்கு புல் வெட்டுவதற்காக சென்ற போது, யுவதியை துஷ்பிரயோகம் செய்ய முயன்றுள்ளார். அவர் மறுத்ததால், சந்தேக நபர் அவளை காட்டுப் பகுதிக்கு இழுத்துச் சென்றுள்ளார்.

அவர் அங்கேயே கொல்லப்பட்டதாகவும் கொலையின் பின்னர் சடலம் அதே இடத்தில் புதைக்கப்பட்டதாகவும் அவர் வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார். ஆனால், சடலம் இன்னும் கண்டுபிடிக்கப்படவில்லையெனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

பணியிடத்துக்குச் செல்ல வீட்டிலிருந்து வெலிகல்ல வரை சுமார் 2 கி.மீ தூரம் நடந்து செல்ல வேண்டிய நிலையில் அந்த வீதியின் பல இடங்கள் வெறிச்சோடிகாணப்படுவதாகதெரிவிக்கப்பட்டது.

எனினும், வீட்டிலிருந்து சுமார் 100 மீற்றர் தொலைவிலுள்ள எல்பிட்டிய பள்ளிவாசலின் சி.சி.டி.வி. கமெராவில் பாத்திமா வீதியில் நடந்து செல்வது பதிவாகியுள்ளது.

அங்கிருந்து சுமார் 50 மீற்றருக்குப் பிறகுள்ள சி.சி.டி.வி. கமெராவில் பாத்திமா நடந்து செல்லும் காட்சிகள் எதுவும் பதிவாகவில்லை எனவும் உள்ளூர்வாசிகள் யாரும் அவளைப் பார்க்கவில்லையெனவும் தெரிவிக்கப்படுகின்றது.

அதன்படி, கம்பளை, வெலிகல்ல, மகாவலி கங்கை மற்றும் அதனை அண்மித்த வனப்பகுதிகளில் கம்பளை பொலிஸாரும் பிரதேசவாசிகளும் நேற்று தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

அதன்படி, கம்பளை, வெலிகல்ல, மகாவலி கங்கை மற்றும் அதனை அண்மித்த வனப்பகுதிகளில் கம்பளை பொலிஸாரும் பிரதேசவாசிகளும் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டனர்.




## எல்பின் ஆற்றில் இரசாயன கலவை

# பரிசோதனைகளை விரைவில் மேற்கொள்ளுமாறு இராஜாங்க அமைச்சர் அரவிந்தகுமார் வலியுறுத்தல்

எல்பின் ஆற்றுநீரில் இரசாயன கலவை கலக்கப்பட்டுள்ளமை தொடர்பில் மிக விரைவில் பரிசோதனைகளை மேற்கொண்டு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கல்வி இராஜாங்க அமைச்சர் அருணாச்சலம் அரவிந்தகுமார் நுவரெலியா மாவட்ட அரச அதிபரை வலியுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பில் நுவரெலியா மாவட்ட அரச அதிபருக்கு கடிதமொன்றினையும் அவர் அனுப்பி வைத்துள்ளார். அக்கடிதத்தின் பிரதிகள் விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர, மீன்பிடித்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, நுவரெலியா மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் ஆகியோருக்கும் சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கும் அனுப்பி வைத்துள்ளதாக அமைச்சின் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.



அக்கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

நுவரெலியா மாவட்டத்தில் எல்பின், மெராயா, லிந்துலை ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த விவசாயிகளில் அநேகமானோர் எல்பின் ஆற்றின் இருபக்கக் கரையோரங்களையும் அண்மித்தவாறே விவசாய நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். எல்பின் ஆற்று நீரையே தங்களது விவசாய நடவடிக்கைகளுக்கு பயன்படுத்திவருகின்றனர். எனினும் துரதிஷ்டவசமாக ஆற்று நீரில் நச்சுத்தன்மையுடனான இரசாயன பதார்த்தம் கலந்திருப்பதன் காரணமாக பல்வேறு சவால்களுக்கு பிரதேச விவசாயிகள் முகம்கொடுத்துள்ளனர்.

அத்துடன் தமது விவசாய நடவடிக்கைகளை முன்னோக்கி நகர்த்தி செல்வதில் எதிர்கொள்ளப்படும் விளைவுகளை தவிர்த்து கொள்வதற்கு உரிய தலையீடுகளை மேற்கொள்ளுமாறு சம்பந்தப்பட்ட விவசாயிகள் எனது கவனத்துக்கு கொண்டுவந்துள்ளதுடன் கோரிக்கைகளையும் முன்வைத்துள்ளனர். இவ்விவகாரத்தில் கிடைக்கப்பெற்ற தகவல்களின் அடிப்படையில் ஆற்றுநீர் அம்பேவெல பகுதியில் அமைந்துள்ள உற்பத்தி நிலையமொன்றின் கழிவுகளினாலேயே மாசடைந்துவருகின்றமை தெரியவருகிறது.

இந் நிலைமையானது விவசாய நடவடிக்கைகளுக்கு பெரும் பாதிப்பை ஏற்படுத்தும் அதேவேளை ஆற்றின் உயிரினங்களுக்கும் உயிராபத்தை ஏற்படுத்தி வருகிறது.

இது எதிர்காலத்தில் பாரிய மனித முரண்பாடுகளுக்கு வழிவகுக்கலாம். அதுமாத்திரமல்லாது மக்கள் பல்வேறு சுகாதார பிரச்சினைகளுக்கு முகம்கொடுக்க வேண்டிய நிலை ஏற்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.



உள்ளூராட்சி விவகாரங்களுக்கான நிதி நிர்வாகம் தொடர்பிலான டிப்ளோமா கற்கைநெறியின் பட்டமளிப்பு விழா நேற்று ஊவா மாகாண ஆளுநர் ஏ.ஜே.எம். முஸம்மில் தலைமையில் பதுளை சைமன் பீரிஸ் ஞாபகார்த்த மண்டபத்தில் நடைபெற்றது. இதன்போது எடுக்கப்பட்ட படத்தை இங்கு காணலாம். (படம்: பதுளை தினகரன் விசேட நிருபர்)

## மஸ்கெலியா, நோர்வூட் பகுதிகளில்

# மிருக வைத்தியர் ஒருவர் இன்மையால் கால்நடை வளர்ப்பாளர்கள் பெரிதும் பாதிப்பு

**(மஸ்கெலியா தினகரன் விசேட நிருபர்)**

மஸ்கெலியா, நோர்வூட் பிரதேச சபைக்குட்பட்ட பகுதிகளில் மிருக வைத்தியர் ஒருவரின்மையால் கால்நடை வளர்ப்பாளர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். இதுகுறித்து பண்ணையாளர்கள் கருத்து தெரிவிக்கையில், பெருந்தோட்ட பகுதிகளில் தற்போது அதிகமானவர்கள் கால்நடை வளர்ப்பாளர்களாகவுள்ளனர்.

இதனால் மிருக வைத்தியசாலையில் வைத்தியர் ஒருவர் இல்லாமையால் மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டு வருவதாக புகார் தெரிவிக்கின்றனர்.

மஸ்கெலியா, பொகவந்தலாவ நகரங்களிலுள்ள மிருக வைத்திய சாலைகளில் வைத்தியர் ஒருவர் இல்லாமையால் அப்பகுதியிலுள்ள கால்நடை வளர்ப்பாளர்கள் ஹற்றன் நகரிலுள்ள பிரதான மிருக வைத்தியசாலைகளுக்கே செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் பல்வேறு சிரமங்களுக்கு உள்ளாகியுள்ளதாக தெரிவிக்கின்றனர்.

ஆகையால் சம்பந்தப்பட்ட அமைச்சர் மற்றும் மத்திய மாகாண மிருக வைத்திய இலாகா முன்வந்து இரண்டு மிருக வைத்தியசாலைக்கும் தகுந்த வைத்தியர்களை நியமிக்குமாறு வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

# கண்டியில் வெசாக் தின கொண்டாட்டங்கள்

**(எம்.ஏ. அமீனுல்லா)**



வெசாக் தினத்தை முன்னிட்டு, கண்டி உதவி உயர்ஸ்தானிகர் டாக்டர் எஸ். ஆதிரா உட்பட பல்வேறு பிரமுகர்களினால் வெசாக் தோரணங்கள் திறக்கப்பட்டு பல்வேறு கலாசார நிகழ்வுகளும் இடம்பெற்றன.

கண்டி ஸ்ரீ தலதா மாளிகைக்கு முன்பாக அண்மையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் தலதா மாளிகையில் தியவடன நிலமே பிரதீப் நிலங்க தேல, மத்திய மாகாண ஆளுநர் எச்.ஈ. லலித் யு.கமகே, பாராளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் ரஞ்சித் பண்டார, கண்டி மாவட்டச் செயலாளர் சந்தன தென்னகோன், சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் மாநகர ஆணையாளர், இந்திய நாட்டு பிரமுகர்கள் உள்ளிட்ட ஆயிரக்கணக்கான பக்தர்களும் கலந்து கொண்டனர்.

வெசாக் பண்டிகையை முன்னிட்டு அரசாங்கத்தின் மனிதாபிமான உதவித்திட்டத்தின் கீழ் ஏழைக் குடும்பங்களுக்கு உலர் உணவுபொருட்கள் விநியோகிக்கப்பட்டன. கண்டி இந்திய தூதரகம் இதனை ஏற்பாடு செய்திருந்தது.

# கண்டியில் எம்.ஜி.ஆர் ஞாபகார்த்த நூதனசாலை

**(மாவத்தகம தினகரன் நிருபர்)**

கண்டியில் எம்.ஜி.ஆர். ஞாபகார்த்த நூதனசாலை மற்றும் தொழில்நுட்ப பாடநெறிக்கான கல்வி நிலையமொன்றை அமைக்க நடவடிக்கை எடுத்துள்ளதாக தமிழக சட்டமன்ற உறுப்பினரும் அ.தி.மு.க கட்சியின் முன்னாள் அமைச்சருமான கோவில்பட்டி கடப்பூர் செ.ராஜு தெரிவித்தார்.

கண்டி தமிழ் வர்த்தக சங்கம் விடுத்த கோரிக்கைக்கமைவாக கண்டி ஹந்தானை பிரதேசத்தில் எம்.ஜி.ஆர் ஞாபகார்த்த நூதனசாலை மற்றும் தொழில்நுட்ப பாடநெறிக்கான கல்வி நிலையமொன்றை அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இலங்கைக்கு வருகை தந்துள்ள அ.தி.மு.க சட்டமன்ற முன்னாள் உறுப்பினர்களுடன் எம்.ஜி.ஆர். அறக்கட்டளை மற்றும் எம்.ஜி.ஆர். சினிமா தயாரிப்பு நிறுவனத்தின் ஸ்தாபக குழு உறுப்பினர்கள் கண்டிக்கு விஜயம் செய்தனர்.

இவர்கள் கண்டி தமிழ் வர்த்தக சங்க உறுப்பினர்களுடன் சங்க அலுவலகத்தில் சந்தித்து கலந்துரையாடலில் ஈடுபட்டனர். இதன்போது கண்டியில் எம்.ஜி.ஆர் வாழ்ந்த வீட்டையும் இக்குழுவினர் பார்வையிட்டனர். இக்கலந்துரையாடலில் கலந்துகொண்ட



தமிழக சட்டமன்ற உறுப்பினரும் அ.தி.மு.க கட்சியின் முன்னாள் அமைச்சருமான கோவில்பட்டி கடப்பூர் செ. ராஜு கருத்து தெரிவிக்கையில்,

அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தை நிறுவிய மக்கள் தலைவர், புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் கண்டியில் தான் பிறந்தார் என்பது ஊர் உலகெல்லாம் அறிந்த விடயம். நாங்கள் வாழ்நாளில் ஒருநாளாவது அவர் பிறந்த மண்ணையும் பிறந்த வாசஸ்தலத்தையும் பார்க்க வேண்டும் என்று சொல்லியிருந்தோம். அவர் தோற்றுவித்த இயக்கம் தமிழகத்தில் 34 ஆண்டுகள் ஆட்சி செய்து வரலாறு படைத்த இயக்கமாகும். நாங்கள் எம்.ஜி.ஆர். பிறந்த மண்ணைப் பார்க்க வேண்டும். அந்த ஊர் மக்களுடன் கலந்துபேச வேண்டும் என்று அ.தி.மு.க வின் பொதுச்செயலாளரும் தமிழகத்தின் எதிர்க்கட்சியின் தலைவருமான எடப்பாடியிடம் அனுமதியைப் பெற்று இங்கு வந்துள்ளோம்.

நாங்கள் கண்டி நகரில் எம்.ஜி.ஆர் வாழ்ந்த இல்லத்தைப் பார்வையிட்டோம். கண்டி தமிழ் வர்த்தகசங்கம் கண்டி மாவட்டத்தில் வாழும் வருமானம் குறைந்த பாதிக்கப்பட்ட தமிழர்களுக்கு நலத்திட்டப்பணிகளைச் செய்துள்ளனர். அவர்கள் செய்த பணியைப் பார்த்து நாங்கள் மற்றற்ற மகிழ்ச்சியடைகின்றோம் என அவர் மேலும் தெரிவித்தார்.

# ஹற்றன் பஸ்தரிப்பிடத்தை விரைவில் புனரமைக்குமாறு மக்கள் கோரிக்கை





**மஸ்கெலியா தினகரன் விசேட நிருபர்**

மத்திய மலைநாட்டில் கடந்த சில நாட்களாக கனத்த மழை பெய்து வருகின்றது.

இதனால் எங்கு பார்த்தாலும் கழிவு நீர் தேங்கி நிற்பதால் மக்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம்கொடுக்கின்றனர்.

குறிப்பாக ஹற்றன் நகரிலுள்ள பிரதான பஸ் தரிப்பிடத்தில் பாரியளவில் வீதிகள் குண்டும் குழியுமாக காணப்படுகின்றது. தற்போது அப்பகுதியில் கழிவு நீர் குழியில் நிறைந்த நிலையில் உள்ளமையால், பாடசாலை மாணவர்கள், பயணிகள், நடத்துனர்கள், சாரதிகள் மற்றும் அவ்வழியாக செல்லும் மக்கள் பாரிய அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்து வருகின்றனர்.

இது குறித்து சம்பந்தப்பட்ட ஹற்றன் நகரசபை, தனியார் அரச பேருந்து சபையினர் நடவடிக்கை எடுக்க வேண்டுமென கோரிக்கை விடுக்கின்றனர்.


கடந்த பல ஆண்டுகளாக இந்த பஸ்தரிப்பிடம் புனரமைக்கப்படவில்லை.நாளாந்தம் இந்த பஸ் தரிப்பிடத்திலிருந்து கொழும்பு, கண்டி, கதிர்காமம், யாழ்ப்பாணம், அம்பாறை, மட்டக்களப்பு, அநுராதபுரம், கம்பளை, நாவலப்பிட்டி, டயகம, நுவரெலியா,பலாங்கொட,எம்பிலிபிட்டி, பொகவந்தலாவ, மஸ்கெலியா, சாமிமலை போன்ற பல்வேறு பகுதிகளுக்கு தனியார் அரச பஸ்கள் சேவையில் ஈடுபட்டு வருகின்றன. எனவே விரைவில் ஹற்றன் நகரசபை முன்வந்து உடன் புனரமைப்பு பணிகளை மேற்கொள்ள வேண்டுமென கோரிக்கை விடுக்கின்றனர்.

# நுவரெலியா பொது வைத்தியசாலை கண்புரை விவகாரம்: 32 பேருக்கு தொடர்ந்து சிகிச்சை

நுவரெலியா மாவட்ட பொது வைத்தியசாலையில் கண் சத்திரசிகிச்சை செய்யப்பட்ட 10 நோயாளர்களின் பார்வையில் பாதிப்பு ஏற்பட்டது. இதன் காரணமாக ஏப்ரல் மாதம் 05 சத்திரசிகிச்சைக்குள்ளான 32 பேருக்கு தொடர்ந்து தீவிர சிகிச்சை வழங்கப்பட்டு வருகின்றன.

பாதிக்கப்பட்டவர்களில் ஐவர் கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கும், 25 பேர் கண்டி வைத்தியசாலைக்கும் மேலதிக சிகிச்சைக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர். இவர்களில் நால்வர் தொடர்ந்து நுவரெலியா மாவட்ட பொது வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இவ்விடயம் தொடர்பாக நுவரெலியா மாவட்ட பொது வைத்தியசாலையின் பணிப்பாளர் மஹேந்திர செனவிரட்ன விடம் வினவிய போது இதற்கு முக்கிய காரணமாக அமைந்தது சத்திரசிகிச்சையின் பின்னர் பாவிக்கப்பட்ட மருந்தாகும். இவை தேசிய வைத்தியசாலையிலிருந்து கொண்டுவரப்பட்டதாக அவர் தெரிவித்தார்.



# ஆசிரியர் சேவையில் 36 பிக்குகள்

**(எம்.ஏ. அமீனுல்லா)**

இலங்கையின் ஆசிரியர் சேவையில் 36 பிக்குகள் இணைத்துக்கொள்ளப்பட்டுள்ளனர்.

2022 ஆம் ஆண்டில், மத்திய மாகாணத்தில் அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவிக்காக ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட 36 பிக்குகளே இவ்வாறு இலங்கை ஆசிரியர் சேவையில் இணைத்துக்கொள்ளப்பட்டுள்ளனர். ஆசிரியர்களுக்கான நியமனக் கடிதங்கள் மத்தியமாகாண ஆளுநர் லலித். யூ. கமகே தலைமையில் மாகாண ஆளுநர் அலுவலக கேட்போர் கூடத்தில் அண்மையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் மத்திய மாகாண பிரதம செயலாளர் காமினி ராஜரத்ன மற்றும் கல்வி அமைச்சின் பிரதம செயலாளர் அஜித் பிரேமசிங்க, சிரேஷ்ட உதவி செயலாளர், மத்திய மாகாண கல்வி பணிப்பாளர் மற்றும் அரச அதிகாரிகள் என பலரும் கலந்து கொண்டனர்.

## உதைப்பந்தாட்ட போட்டியில்

# ஹைபொரஸ்ட் நுவரெலியா மாநகர சபை அணிகள் வெற்றி

நுவரெலியா உதைப்பந்தாட்ட மத்தியஸ்தர்கள் சங்கத்தினால் 15 வயதுக்குட்பட்டவர்கள் மற்றும் 40 வயதுக்குட்பட்டவர்கள் என இரு பிரிவுகளாக உதைப்பந்தாட்ட போட்டிகள் நடத்தப்பட்டன.

அணிக்கு 11 பேர் கொண்ட 15 வயதிற்கு கீழ்பட்டவர்களுக்கான உதைப்பந்தாட்ட போட்டி தொடரில் 16 அணிகள் பங்குபற்றினர். இப்போட்டித் தொடரில் ஹைபொரஸ்ட் இல (03) தமிழ் பாடசாலை அணி முதலாமிடத்தை பெற்று கிண்ணத்தை சுவீகரித்தது, இரண்டாமிடத்தை நுவரெலியா அகடமி அணியினர் பெற்றுக்கொண்டனர்.

அதேவேளை அணிக்கு ஏழு பேர் கொண்ட 40 வயதுக்கு மேற்பட்டோருக்கான போட்டித்தொடரில் 12 அணிகள் பங்குப்பற்றினர்.

இப்போட்டித் தொடரின் கிண்ணத்தை நுவரெலியா மாநகர சபையின் 40 வயதுக்குட்பட்ட அணியினர் முதலாமிடத்தை பெற்று கிண்ணத்தை கைப்பற்றினர். இரண்டாமிடத்தை நேஸ்பி விளையாட்டு கழகத்தினர் பெற்றுக்கொண்டனர்.

(ஆ.ரமேஸ்)

# மோட்டார் சைக்கிள் வேக கட்டுப்பாட்டை இழந்து விபத்து

**(ஊவா சுழற்சி நிருபர்)**

தியத்தலாவை பண்டாரவளை வீதியில் நில அளவை திணைக்களத்திற்கு அருகாமையில் நேற்றுமுன்தினம் (11) காலை இடம்பெற்ற வாகன விபத்தில் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மோட்டார் வண்டியை செலுத்தி வந்த கஹகொல்ல மெனிக்கந்த பிரதேசத்தைச் சேர்ந்த இளைஞனே இவ்வாறு படுகாயமடைந்துள்ளார்.

மோட்டார் சைக்கிள் வேகக் கட்டுப்பாட்டை இழந்து காருடன் மோதுண்டமையால் விபத்து ஏற்பட்டுள்ளது. இதனால் இரு வாகனங்களுக்கும் பாரிய சேதம் ஏற்பட்டுள்ளதாக தியத்தலாவை போக்குவரத்துப் பொலிஸார் தெரிவித்தனர். இச்சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# பச்சை கொழுந்தின் விலை பாரியளவில் வீழ்ச்சி

**(பலாங்கொடை தினகரன் நிருபர்)**

பச்சை கொழுந்தின் விலை பாரியளவில் வீழ்ச்சியடைந்துள்ளமையால் பலாங்கொடை பிரதேச சிறுதேயிலைத் தோட்ட உரிமையாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

பச்சைக் கொழுந்தின் விலை வீழ்ச்சியின் காரணமாக தேயிலை உற்பத்தியினால் வருமானம் குறைந்துள்ளதாக சிறு தேயிலைத் தோட்ட உரிமையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

தேயிலை உற்பத்திக்கு பயன்படுத்தும் உரத்தின் விலையை மேலும் குறைத்து தருவதற்கு சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமெனக் கோரிக்கை விடுத்துள்ளனர். கடந்த ஜனவரி, பெப்ரவரி மாதங்களில் இருந்த விலையை விட தற்போது பச்சை கொழுந்து ஒரு கிலோவின் விலை பாரியளவில் வீழ்ச்சியடைந்துள்ளதாக சிறுதேயிலைத் தோட்ட உரிமையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

## மாந்தை கிழக்கில் திருக்குறள் விழா





**மாங்குளம் குறூப் நிருபர்**

முல்லைத்தீவு, மாந்தை கிழக்கு பிரதேச செயலகத்தில் திருக்குறள் விழா கடந்த செவ்வாய்க்கிழமை (09) மிகச் சிறப்பாக நடைபெற்றது.

நலன் விரும்பிகளின் அனுசரணையுடன் மாந்தை கிழக்கு பிரதேச செயலாளர் ந.ரஞ்சனா தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் பிரதம விருந்தினராக கலந்துகொண்ட முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் க.விமலநாதன், திருவள்ளுவர் சிலைக்கு மலர்மாலை அணிவித்து விழாவை ஆரம்பித்து வைத்தார்.

திருவள்ளுவர் தோற்றத்தை தரித்த பாடசாலைச் சிறுவனொருவன் பல்லக்கில் விழாவுக்கு அழைத்து வரப்பட்டார்.

இதன் பின்னர் குறள் வாழ்த்து, தமிழ்த்தாய் வாழ்த்துகள், கலை நிகழ்வுகள் நடைபெற்றன.

அத்துடன், மாணவர்களுக்கு சான்றிதழ்களும் பரிசில்களும் வழங்கி வைக்கப்பட்டன.

## யாழில் கொத்து கடைக்கு சீல்

**யாழ்.விசேட நிருபர்**

யாழ்ப்பாணம் ஆனைப்பந்தி சந்திக்கு அண்மையிலுள்ள உணவகமொன்றுக்கு, நீதிமன்ற உத்தரவுக்கமைய யாழ். மாநகர சபை பொது சுகாதார பிரிவினரால், சீல் வைக்கப்பட்டுள்ளது.

கடையில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை வாங்கிய கொத்து ரொட்டியினுள் பழுதடைந்த இறைச்சி காணப்பட்டதாக நபரொருவர் பொது சுகாதார பரிசோதகருக்கு முறையிட்டுள்ளார்.

முறைப்பாட்டின் பிரகாரம் மாநகர சுகாதார வைத்திய அதிகாரி தலைமையிலான குழுவினர் கடையினை சோதனையிட்ட போது, பழுதடைந்த குளிர்சாதன பெட்டியினுள் சமைத்த, சமைக்காத கோழி இறைச்சி, மாட்டு இறைச்சி, ஆட்டிறைச்சி என 45 கிலோ இறைச்சி மீட்கப்பட்டதுடன், உணவகத்தின் பல சுகாதார சீர்கேடுகள் காணப்பட்டதையும் அவதானித்துள்ளனர்.

அதனையடுத்து நேற்றைய தினம் வெள்ளிக்கிழமை உணவகத்திற்கு எதிராக யாழ். நீதவான் நீதிமன்றில் தொடரப்பட்ட வழக்கினை அடுத்து, உணவகத்தினை உடனடியாக மூடி சீல் வைக்குமாறும், மீட்கப்பட்ட 45 கிலோ இறைச்சியை அழிக்குமாறும் உத்தரவிட்ட நீதவான் வழக்கினை எதிர்வரும் ஜூன் மாதம் 28ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார்.

## விழிப்புணர்வின் மூலமே போதை பாவனையை கட்டுப்படுத்த முடியும்

**உளநல வைத்தியர் ஜெயராசா**

யுத்தத்துக்கு பின்னரே போதைப்பொருள்மற்றும்மதுபானப்பாவனை அதிகரித்துள்ளது.

இதனால் பல்வேறுபட்ட சமூகப்புரள்வான சம்பவங்களும் இடம்பெற்று வருவதாக, கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையின் உளநல வைத்தியர் மா.ஜெயராசா தெரிவித்தார்.

இந்நிலையில், சமூகத்தில் விழிப்புணர்வுகளை ஏற்படுத்துவதன் மூலமே போதைப்பொருள் பாவனையை கட்டுப்படுத்த முடியுமெனவும் அவர் தெரிவித்தார்.

கிளிநொச்சியில் போதைப்பொருள் பாவனையை ஒழிப்பது தொடர்பான செயலமர்வு, கிளிநொச்சி மாவட்ட பெண்கள் வாழ்வுரிமைச் சங்கத்தின் ஏற்பாட்டில் கிளிநொச்சி மாவட்ட கூட்டுறவுச் சபையில் கடந்த புதன்கிழமை (10) நடைபெற்றது. இதில் வளவாளராக கலந்துகொண்ட போதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்த போது,

"எமது சமூகத்தை பாதுகாக்க வேண்டிய பொறுப்பு அனைவரிடமுள்ளதுடன், போதைப்பொருள் மற்றும் மதுபானப் பாவனையை ஒழிப்பதற்காக கிராம மட்டங்களிலுள்ள சிறு குழுக்கள் முன்வர வேண்டும். இந்நிலையில் இளம் சமுதாயத்தை பாதுகாக்க முடியும் என அவர் இதன்போது தெரிவித்தார்.

வடமாகாண பாடசாலைகளில்

## இடைவிலகிய மாணவர்களின் விபரங்களை கோரும் வட மாகாண ஆளுநர்



### வலயக் கல்விப் பணிப்பாளர்களுக்கு பணிப்புரை

**கோப்பாய் குறூப் நிருபர்**

வட மாகாண பாடசாலைகளிலிருந்து இடை விலகிய மாணவர்களின் விபரங்களை வலயக் கல்விப் பணிப்பாளர்கள் ஊடாக தமக்கு அனுப்பி வைக்குமாறு வடமாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா பணிப்புரை விடுத்துள்ளார்.

கடந்த யாழ்.மாவட்ட அபிவிருத்தி குழுக் கலந்துரையாடலில் முன்வைக்கப்பட்ட கோரிக்கை தொடர்பில் அவர் அனுப்பி வைத்துள்ள ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது, வட மாகாண பாடசாலைகளிலிருந்து மாணவர்கள் இடைவிலகல்கள் இடம்பெறுவது தொடர்பில் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது.

பாடசாலை மாணவர்கள் இடைவிலகுவது அல்லது கட்டாய விடுகைப் பத்திரம் வழங்குவது தொடர்பில் உரிய அதிகாரிகளின் தலையீடு பின்பற்றப்பட்டிருக்க வேண்டும்.

பாடசாலையிலிருந்து இடைவிலகிய மாணவர்கள் சமூகத்தில் என்ன செய்கிறார்கள் என்பது தொடர்பில் அவதானிப்புகள் இடம்பெற்றிருக்க வேண்டும். ஆகவே கடந்த மூன்று வருடங்களில் பாடசாலைகளில் இருந்து இடைவிலகிய மாணவர்களின் பெயர் பட்டியலை தமக்கு அனுப்பி வைக்குமாறு ஆளுநர் சகல வலயக்கல்விப் பணிப்பாளர்களுக்கும் பணிப்புரை விடுத்துள்ளார்.

## டெங்கு ஒழிப்பு செயற்திட்டம்

**யாழ்.விசேட நிருபர்**



யாழ்ப்பாணத்தில் டெங்கு நோய் தாக்கம் அதிகரித்துவருகின்றமையால் விசேட டெங்கு ஒழிப்பு செயற்திட்டமொன்றை யாழ்.மாவட்ட செயலகம் முன்னெடுக்கப்படவுள்ளது.

எதிர்வரும் 16 ஆம் திகதி மற்றும் 17ஆம் திகதிகளில் டெங்கு ஒழிப்பு செயற்திட்டம் மாவட்டம் முழுவதுமாக முன்னெடுக்கப்படவுள்ளது.

சுகாதார திணைக்களம், உள்ளூராட்சி சபைகள் மற்றும் பிரதேச செயலகங்கள் மூலம் இச்செயற்திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

கிராம சேவையாளர்கள் ஊடாக பொதுமக்களுக்கு அறிவிக்கப்படும்.

எனவே டெங்கு ஒழிப்பு செயற்திட்டத்தில் பொது அமைப்புக்கள், பொதுமக்கள் இணைந்து ஒத்துழைப்பு வழங்க வேண்டுமென மாவட்ட செயலகம் கோரியுள்ளது.

## சடலம் மீட்பு

**யாழ்.விசேட நிருபர்**

யாழ்ப்பாணம் உரும்பிராய் பகுதியிலுள்ள வீடொன்றில் கிணற்றிலிருந்து பெண்ணொருவரின் சடலம் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை மீட்கப்பட்டுள்ளது.

அப்பகுதியைச் சேர்ந்த ஆ. நியாளினி (வயது 37) என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்துள்ள கோப்பாய் பொலிஸார் மரணம், தற்கொலையா? விபத்தா? என்ற கோணத்தில் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

## நுங்கு திருட்டு அதிகரிப்பு

யாழ்ப்பாணத்தில் நுங்கு திருட்டுக்கள் அதிகரித்துள்ளதாகவும், அதனை கட்டுப்படுத்த உரிய தரப்புக்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் காணி உரிமையாளர்கள் கோரியுள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் நிலவும் வெப்பமான காலநிலை காரணமாக நுங்குக்கு கடும் கிராக்கி ஏற்பட்டுள்ளது.

அதனால் ஆட்கள் அற்ற தனியார் காணிகளுக்குள் உள்ள பனை மரங்களில் நுங்குகளை குலை குலையாக திருடர்கள் வெட்டிச் செல்கின்றனர்.

காணிக்குள் விழும் பனம் பழங்கள் ஊடாகவே பனாட்டு செய்கிறோம், பனம் பழங்களின் விதைகள் கொண்டு, பனம் பாத்தி செய்து அதன் ஊடாகவே பனம் கிழங்கு, ஒடியல் என்பவற்றை பெற்றுக்கொள்கிறோம்.

பனம் பழத்தின் இளம் பதமாக உள்ள நுங்குகளை குலை குலையாக திருடர்கள் வெட்டிக் செல்வதனால் பனம் பழம் இல்லாது போகிறது. பனம் பழத்தின் ஊடாக பெற்றுக்கொண்ட எமது சிறிய வாழ்வாதாரம் இல்லாமல் போகின்றது.

எனவே உரிய தரப்புக்கள் இது தொடர்பில் கவனம் செலுத்தி நுங்கு திருட்டுக்களை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என மக்கள் கோரியுள்ளனர்.

## பிரதேச சபை காணியை அபகரித்த தனி நபர் - போராடி மீட்ட மக்கள்

**சாவகச்சேரி, யாழ்.விசேட நிருபர்கள்**

யாழ்ப்பாணம்- கொடிகாமம் பகுதியில் பிரதேசசபைக்கு சொந்தமான வீதியையும் கமநல சேவைகள் திணைக்களத்திற்கு சொந்தமான குளத்தினையும் சட்டவிரோதமான முறையில் தனிநபரொருவர் அபகரித்து எல்லை வேலிகளை போட்டு, அவ்வீதி ஊடான போக்குவரத்தையும் தடை செய்திருந்தார்.

இந்த நபரின் ஆக்கிரமிப்பிலிருந்து வீதியை மீட்டுத் தரக் கோரி அப்பகுதி மக்கள் சாவகச்சேரி பிரதேச சபை முன்பாக நேற்றைய தினம் வெள்ளிக்கிழமை போராட்டத்தில் ஈடுபட்டனர்.

அதனையடுத்து போராட்டத்தில் ஈடுபட்ட மக்களுடன் பிரதேச சபை செயலாளர் , கொடிகாமம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஆகியோர் பேச்சு நடாத்திய போதிலும், போராட்டத்தில் ஈடுபட்டவர்கள், தமக்கு வீதியை மீட்டுத் தரும் வரை போராட்டம் தொடரும் என அறிவித்தனர்.

அதனையடுத்து வீதிக்கு போராட்டக்காரர்கள், பொலிஸார் பிரதேச சபை உத்தியோகஸ்தர்கள் சென்று தனியாரால் அபகரிக்கப்பட்டு போடப்பட்டிருந்த வேலியை அகற்றி அவ்வீதி ஊடான போக்குவரத்துக்கு வீதியை திறந்து விட்டனர்.

அதேவேளை தனிநபர் அந்த வீதியையும், கமநல சேவைகள் திணைக்களத்திற்கு சொந்தமான குளத்தின் ஒரு பகுதியையும் அபகரித்து 2020 ஆம் ஆண்டு காலப்பகுதியில் வேலி அடைத்து அபகரித்துள்ளார்.

இதுதொடர்பில் அப்பகுதி மக்களால் பிரதேச சபையிடம் முறையிட்டதையடுத்து பிரதேச சபையினர் விசாரணைகளை முன்னெடுத்து ஆவணங்களை பரிசீலித்து, வீதி பிரதேசசபைக்கு சொந்தமானது என தெரிவித்து வேலிகளை அகற்றி அவ்வீதி ஊடாக போக்குவரத்து செய்வதற்கு வீதியை திறந்து விட்டிருந்தனர்.

அவ்வாறு வீதி திறந்து விடப்பட்டு ஒரு சில வாரங்களிலேயே மீண்டும் அவ்வீதியையும் குளத்தையும் அபகரித்து வேலி அமைத்துள்ளார்.

இந்நிலையில் மக்கள் நேற்றைய தினம் வெள்ளிக்கிழமை போராட்டம் செய்து மீண்டும் வீதியை மீட்டுள்ளனர்.

## யாழ். போதனா வைத்தியசாலையில் இலவச கண்புரை சத்திரசிகிச்சை

**பருத்தித்துறை விசேட நிருபர்**

யாழ்ப்பாணத்தில் பின்தங்கிய பிரதேசங்களில் வாழ்வோரின் நன்மை கருதி நன்கொடையாளர்களின் உதவியுடன் யாழ். போதனா வைத்தியசாலையில் இலவச கண்புரை சத்திர சிகிச்சை மேற்கொள்ளப்படவுள்ளது.

இதற்கான கண் பரிசோதனை முகாம்கள் இன்று சனிக்கிழமை (13) காலை 9.00 மணி தொடக்கம் வரணி பிரதேச வைத்தியசாலையிலும் சங்கானை பிரதேச வைத்தியசாலையிலும் நடைபெறவுள்ளன.

எனவே, கண்புரை சத்திரசிகிச்சை மேற்கொள்ள வேண்டிய தேவைப்பாடுடையோர் கண் பரிசோதனை முகாம்களில் கலந்துகொண்டு தமது பெயர்களை பதிவு செய்ய முடியுமென யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியக் கலாநிதி ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

## யாழ். பல்கலையில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல்



முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வாரத்தின் முதலாம் நாள் நினைவஞ்சலி, நேற்றைய தினம் வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் முள்ளிவாய்க்கால் நினைவுத்தூபி முன்பாக இடம்பெற்றது. ஒரு நிமிட மௌன அஞ்சலியுடன் ஆரம்பமாகிய நினைவேந்தலின் போது, பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் விரிவுரையாளர்களால் மலரஞ்சலி செலுத்தப்பட்டு, ஈகைச்சுடர் ஏற்றப்பட்டது. இதன்போது வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் உறவுகளும் அஞ்சலி செலுத்தினர். இறுதியில் மாணவர்களால் தயாரிக்கப்பட்ட முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கப்பட்டது.

## கிளிநொச்சியில் சர்வதேச தாதியர் தினம்




சர்வதேச தாதியர் தினத்தை முன்னிட்டு கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலை தாதியர்கள் ஏற்பாட்டில் தாதியர் தின நிகழ்வுகள் நேற்று இடம்பெற்றன.

மாவட்ட பொது வைத்தியசாலையில் கடமையாற்றி யுத்த நிலைமையின் போது உயிரிழந்த தாதியொருவரின் திருவுருவப்படத்துக்கு சுடர் ஏற்றி அஞ்சலி செலுத்தப்பட்டது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக ஓய்வு பெற்ற தாதிய கல்லூரியின் பணிப்பாளர் ராயூலாதேவி வல்லிபுரநாதன், கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலை பணிப்பாளர் வைத்தியர் எஸ். சுகந்தன், வைத்தியர்கள், தாதியர்கள், வைத்தியசாலை உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்துகொண்டிருந்தார்.

## வவுனியா இ.போ.ச டிப்போ ஊழியர்கள் பொலிஸாருக்கு எதிராக பணிப் புறக்கணிப்பு

### பயணிகள் அவதி

**வவுனியா விசேட நிருபர்**

இலங்கை போக்குவரத்து சபையின் வவுனியா டிப்போ சாரதி மற்றும் நடத்துனர்கள் பூவரசங்குளம் பொலிஸாருக்கு எதிராக பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து நேற்று பணிப்புறக்கணிப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

ஆடைத்தொழிற்சாலை ஊழியர்களை ஏற்றிச்செல்லும் தனியார் பஸ் வழித்தட அனுமதிப்பத்திரமின்றி இ.போ.ச வவுனியா டிப்போ பஸ் நேரசூசியில் வவுனியா சாலம்பைக்குளம் பகுதியில் பாடசாலை மாணவர்கள் மற்றும் பொதுமக்களை ஏற்றிச் செல்வது தொடர்பில் பூவரசங்குளம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர்.




எனினும் பூவரசங்குளம் பொலிஸார் எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை எனவும் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியை இடமாற்றக்கோரியும் பணிப்புறக்கணிப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இ.போ.ச சாரதி மற்றும் நடத்துனர்கள் மீது தனியார் பஸ் நடத்துனர்கள் தாக்குதல் மேற்கொள்ளப்படுவது தற்போது அதிகரித்து காணப்படுவதுடன் இதற்கு எவ்வித தீர்வுமின்றி நீதிமன்றில் பல வழக்குகள் தொடரப்பட்டுள்ளதாகவும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

எனவே ஊழியர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதுடன் நிலுவையிலுள்ள வழக்குகளுக்கு தீர்வு எட்டப்பட வேண்டும் போன்ற இரு கோரிக்கைகளையும் முன்வைத்து இ.போ.ச வவுனியா சாலையினர் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டு வருகின்றனர்.

இ.போ.ச வவுனியா டிப்போ ஊழியர்களின் பணிப்புறக்கணிப்பு காரணமாக அலுவலக ஊழியர்கள் , மாணவர்கள் , மக்கள் நீண்ட நேரம் வீதியில் காத்திருந்தனர். வவுனியா மத்திய பஸ் நிலையத்தில் தனியார் பஸ்கள் மாத்திரமே சேவையில் ஈடுபட்டிருந்தன.

# நகர்வலம்









உடப்பு தமிழ் மகா வித்தியாலயத்தின் பழைய மாணவர் சங்கத்தின் பரிந்துரைக்கமைய வித்தியாலய பழைய மாணவர்களான வஸ்தியாம்பிள்ளை கணேசமூர்த்தி, ஆர். நல்லைக்கந்தன் ஆகியோரினால் 12இலட்சம் பெறுமதியான தளபாடங்கள் முதற்கட்டமாக பாடசாலை அதிபரிடம் உத்தியோகபூர்வமாக கையளிக்கப்பட்டது. பின்னர் இரண்டாம் கட்டமாக வித்தியாலய பழைய மாணவர்களான பெரியவெள்ளயன் சிவகுமாரனால் 3 இலட்சம் ரூபா பெறுமதியான தளபாடங்களும், வஸ்தியாம்பிள்ளை கணேசமூர்த்தி, ஆர்.நல்லைக்கந்தன் ஆகியோரினால் 1 இலட்சத்து 20 ஆயிரம் ரூபா பெறுமதியான தளபாடங்களும் கையளிக்கப்பட்டது. இதன் போது அதிபர் பூ.சுகந்தன், உதவி அதிபர் சோ. அருட்குமரன் ஆகியோர் கலந்து கொண்டு பொருட்களைப் பெற்றுக் கொண்டனர். (உடப்பு குறூப் நிருபர்)

## அநுராதபுரத்தில் நிறுவன அபிவிருத்தி வேலைத்திட்டங்கள்





**திறப்பனை தினகரன் நிருபர்**

"புதிய கிராமம் புதிய நாடு" என்ற தொனிப் பொருளில் மிஹிந்தலை, கலென்பிந்துனுவெவ, கஹட்ட கஸ்திகிலிய, ஹொரோவபொத்தானை ஆகிய பிரதேச செயலகப் பிரிவுகளில் ஆரம்பிக்கப்பட்ட வேலை திட்டங்கள் தொடர்பில் இடம்பெற்ற 2023 ஆம் ஆண்டுக்கான முதல் காலாண்டு வேலைத் திட்டங்கள் பற்றி கண்டறியும் கள ஆய்வு ஒன்று அண்மையில் இடம் பெற்றது.

இதன்போது, இதன் தேசிய வளர்ச்சி மற்றும் அந்தந்த பிரதேச செயலகப் பிரிவுகளில் நடத்தப்படும் ஆடைகள், பைகள் மற்றும் காலணிகள், சோப்பு, காளான் உற்பத்தி போன்ற பல்வேறு தொழில் துறைகளின் முன்னேற்றம் பற்றி மாவட்ட அரசாங்க அதிபர் இதன் போது பார்வையிட்டார்.

இவற்றில் பெரும்பாலானவை பிரதேச செயலாளர்களின் மேற்பார்வையின் கீழ், அரச அதிகாரிகளின் ஈடுபாட்டுடன் மிகவும் வெற்றிகரமாக முன் கொண்டு செல்லப்பட்ட திட்டங்களாகும். இவற்றில் சில பொருட்கள் ஏற்றுமதி செய்யக்கூடிய தரத்தில் உள்ளமையும் தெரிய வருகின்றது.

இவ்வாறான தரத்துடன் கூடிய தொழில்களை நடாத்துவதற்கு தொழில் முயற்சியாளர்களுக்கு வழிகாட்டியமைக்காக சம்பந்தப்பட்ட பிரதேச செயலாளர்கள் மற்றும் ஏனைய அதிகாரிகளுக்கு மாவட்ட செயலாளர் தனது பாராட்டுக்களை இதன் போது தெரிவித்தார்.

அநுராதபுரம் மாவட்ட செயலாளர் ஜே.எம்.ஜே.கே ஜயசுந்தர, மேலதிக மாவட்ட செயலாளர் (நிர்வாகம்) ஷமிலா விக்கிரமாராச்சி, மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் சுகத் நயானந்தா, முகாமைத்துவ சேவை அதிகாரி சதுரி பொன்னம் பெரும, ஊடக அதிகாரி ஷெல்டன் பண்டார, அபிவிருத்தி உத்தியோகத்தர் இந்திக்க ஜயலத் ஆகியோருடன் கலென்பிந்துனுவெவ, கஹட்டகஸ்திகிலிய, ஹொரோவபொத்தானை பிரதேச செயலாளர்களுடன் சம்பந்தப்பட்ட கள உத்தியோகத்தர்களும் இந்த களப் பரிசோதனையில் கலந்து கொண்டிருந்தனர்.

## இந்தியாவெங்கும் நடைபெறும் ஜி20 ஏற்பாட்டு மாநாடுகள்

### 60 நகரங்களில் 230 கூட்டங்கள் நடைபெறுகின்றன

எதிர்வரும் செப்டம்பர் 9 – 10 ஆம் திகதிகளில் புதுடில்லியில் நடைபெறவுள்ள ஜி20 உச்சி மாநாட்டுக்குத் தயாராகும் வகையில் இந்தியாவின் பல்வேறு பகுதிகளில் பல்வேறு இலக்குகளைக் கொண்ட கூட்டங்கள் தொடர்ச்சியாக நடத்தப்பட்டு வருகின்றன.

கடந்த டிசம்பரில் இந்தியா ஜி20 தலைமையை ஏற்றுக் கொண்டதும் நாடெங்கும் 230 தயார் செய்யும் மாநாடுகளை 50 மாநிலங்களில் உள்ள 60 நகரங்களில் நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டது. உத்தரகாண்டின் ராம்நகர், லக்ஷதீவின் காவரத்தி, டமாம் டியூவின் டியூ தீவு என்பனவற்றிலும் இம் மாநாடுகள் நடத்தப்பட்டன. கடந்த ஐந்து மாதங்களில் 105 மாநாடுகள் நடத்தப்பட்டுவிட்டன. அடுத்த நான்கு மாதங்களில் 125 மாநாடுகள் நடத்தப்பவிருப்பதாகத் தெரிகிறது. இம்மாதம் 10 மாநாடுகள் நடத்தப்படவிருப்பதாகவும், ஜி20 இளைஞர் மாநாடு மணிப்பூரிலும் 22 – 24 இல் சுற்றுலா மாநாடு ஸ்ரீ நகரிலும் நடத்தப்படுமென்றும் ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்த இந்தியாவின் ஓராண்டு தலைமைத்துவத்தின் கீழ் உலக நன்மைக்கான முக்கிய தீர்மானங்களை எடுத்துள்ளதாக ஏற்பாட்டாளர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர். அதில் ஒன்று, ஜி20 நாடுகளின் தலைவர்களுக்கான விஞ்ஞான ஆலோசகர்களின் மாநாடாகும்.

கடந்த மார்ச்சில் உத்தரகாண்ட் ராம் நகரில் முதலாவது சந்திப்பில் உறுப்பு நாட்டுத் தலைவர்களின் விஞ்ஞான ஆலோசகர்கள் கலந்து கொண்டனர். விஞ்ஞான மற்றும் தொழில்நுட்பத்துறைகளில் உலகளாவிய கொள்கைகளை விரைவாக உருவாக்கி செயல்படுத்துவதற்கான நிறுவனத்தை உருவாக்குவது இதன் நோக்கமாகும்.

## அநுராதபுரம் மாவட்டத்தில் போதைப் பொருள் பாவனை அதிகரிப்பு

**திறப்பனை தினகரன் நிருபர்**

அநுராதபுரம் மாவட்டத்தில் போதைப் பொருள் பாவனை அதிகரித்துள்ளதாக அநுராதபுரம் உதவி பொலிஸ் அத்தியட்சகர் டி.ஆர்.எஸ். தர்மதாச தெரிவித்துள்ளார். இது குறிப்பாக இளம் பெண்கள் மத்தியிலும் செயற்கை போதைப் பொருள் பாவனையின் பரவலும் அதிகரித்துள்ளதாகவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

சிறுவர் துஷ்பிரயோக சம்பவங்களும் அதிகளவில் காணப்படுவதால், அவ்வாறான நிலைமைகளைத் தடுக்க அனைத்து தரப்பினரினதும் ஆதரவு பொலிஸாருக்கு அவசியமானது என உதவி பொலிஸ் அத்தியட்சகர் இதன் போது குறிப்பிட்டுள்ளார்.

## ஹிரோஷிமா ஜி 7 உச்சி மாநாட்டில் இந்தியா பங்கேற்கும்

### மேலும் ஏழு நாடுகளுக்கும் அழைப்பு

**ஜப்பான் டைம்ஸ் செய்தி**

இம்மாதம் ஹிரோஷிமாவில் நடைபெறவிருக்கும் ஜி7 உச்சி மாநாட்டில் கலந்து கொள்வதற்கு உறுப்பினர் அல்லாத எட்டு நாடுகளின் தலைவர்களை அழைப்பதற்கு ஜப்பான் தீர்மானித்திருப்பதாக ஜப்பான் டைம்ஸ் செய்தி வெளியிட்டுள்ளது. இந்தியா, தென்கொரியா, பிரேசில், அவுஸ்திரேலியா ஆகியன இதில் அடங்கும்.

இந்தோ பசுபிக் பிராந்தியத்தில் சீனா இராணுவ ரீதியான அழுத்தங்களைப் பிரயோகிப்பதையும், தாய்வான் மீது ஆக்கிரமிப்பை நடத்துவதையும் தவிர்க்கச் செய்யும் வகையில் இந்நாடுகளை அழைப்பதற்கு ஜப்பானிய பிரதமர் பியூமியோ கிஷிடா தீர்மானித்திருப்பதாக டைம்ஸ் தன் செய்தியில் குறிப்பிட்டுள்ளது.

சீனாவின் தற்போதைய இந்தோ பசுபிக் பிராந்திய செயற்பாடுகளின் உறுதித் தன்மையை இது குலைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. சீனாவின் அயல் நாடு என்ற வகையிலும், ஜி20 இன் இவ்வாண்டுக்கான தலைவர், குவாட் அமைப்பின் உறுப்பினர், பிரிக்ஸ் அமைப்பின் உறுப்பினர் என்ற வகையிலும் ஜி7 நாடுகளினால் இந்தியா முக்கியத்துவம் மிக்க நாடாகப் பார்க்கப்படுகிறது. உலகிலேயே அதிக முஸ்லிம்கள் வசிக்கும் ஜனநாயக நாடான இந்தோனீசியாவும் முக்கிய நாடாகக் கருதப்படும் அதேசமயம், உலக நாடுகளுக்கான பொருள் உற்பத்தி மற்றும் விநியோகத்தில் சீனா கொண்டிருக்கும் ஏகபோகத்தை முறித்து அதை இந்தியா, வியட்நாம் மற்றும் இந்தோனீசிய நாடுகளிடம் கையளித்து, புதிய பொருள் உற்பத்தி மற்றும் விநியோக சங்கிலியை ஏற்படுத்தவும் ஜி7 நாடுகள் விரும்புவதாக ஜப்பான் டைம்ஸ் தெரிவித்துள்ளது.

சீனாவின் தொழில்நுட்பத் திறன் அதிகரிப்பு, இராணுவ ரீதியான ஆக்கிரமிப்புக் கொள்கை ஆகியவற்றை மட்டுப்படுத்தி தைவானை ஜனநாயக நாடாக நீடிக்கச் செய்வது என்பன சீனா தொடர்பான கொள்கையாக இருக்கும் எனவும் கூறப்பட்டுள்ளது.





சித்திரா பூரணை விரதம் சித்திர குப்த விரதம் நாடு முழுவதிலும் உள்ள இந்து ஆலயங்களில் மிகவும் சிறப்பாக இடம்பெற்றது. உடப்பு ஸ்ரீ ருக்மணி சத்திய பாமா சமேத ஸ்ரீ பார்த்த சாரதிப் பெருமாள் திரௌபதியம்மன் ஆலயம், உடப்பு ஸ்ரீ வீரபத்திரகாளியம்மன் ஆலயம், ஆண்டிமுனை கன்னியம்மன் ஆலயம் போன்றவற்றில் விஷேட பூஜைகள் அன்னதானம் இடம்பெற்றன. (உடப்பு குறூப் நிருபர்)





வெசாக் தினத்தை முன்னிட்டு புதுக்கோட்டை ஆலமர விகாரையில் (பன்சலையில்) எக்ஸெத் போதிராஜா சமர்த்திய (அமைப்பின்) ஏற்பாட்டில் அன்னதானம் வழங்கும் நிகழ்வு நடைபெற்றது, இந்நிகழ்வில் மேல் மாகாண பொலிஸ் பிரிவின் பொலிஸ் பொறுப்பதிகாரி தேசபந்து தென்னகோனுடன் புறக்கோட்டை பொலிஸ் அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.
படங்கள்: எம் நசார்













கொழும்பு 12 வாழைத்தோட்டம் அல்ஹிக்மா கல்லூரியின் 71வது ஸ்தாபக தினம் கல்லூரி அதிபர் எம்.முஸ்தபா மஃஸுர் தலைமையில் கல்லூரி வளாகத்தில் நேற்று(12) நடைபெற்றது. ஆசிரியர்கள், மாணவர்கள் பங்கேற்ற ஸ்தாபக தின நிகழ்வில் கல்லூரி வரலாறு நினைவு கூரப்பட்டது. இதன்போது 2022ஆம் ஆண்டுக்கான தேசிய மட்ட 18 வயதிற்குட்பட்ட உதைப்பந்தாட்டச் சுற்றில் இறுதிப்போட்டிக்குத்தெரிவாகி ரன்அப் வெற்றிக்கிண்ணத்தை பெற்றுக்கொண்ட அல்ஹிக்மா அணிக்கு நினைவுப் பரிசு வழங்கி கௌரவிக்கப்பட்டது.

# அல்–பஹ்றியா வெற்றி



**அக்கரைப்பற்று வடக்கு தினகரன் நிருபர்**

அக்கரைப்பற்று வலயக்கல்விப் பணிமனைக்குட்பட்ட பாடசாலைகளின் வலய மட்ட விளையாட்டு போட்டியின் 16 வயதுக்குட்பட்ட ஆண்களுக்கான உதைபந்தாட்ட போட்டியில் பொத்துவில் அல்–பஹ்றியா பாடசாலை அணி சம்பியன் பட்டத்தை வென்றது.

பாலமுனை பொது விளையாட்டு மைதானத்தில் கடந்த புதன்கிழமை (10) நடைபெற்ற இந்தப் போட்டியில், பள்ளிக்குடியிருப்பு அல்–பாயிஷா மகா வித்தியாலய அணியை அல்–பஹ்றியா அணி தோற்கடித்தது.

# ஆசிய கிண்ணத்தில் நான்கு போட்டிகளை மாத்திரம் பாகிஸ்தானில் நடத்த பரிந்துரை




ஆசிய கிண்ணத் தொடரை இரண்டு நாடுகளில் கலப்பு முறையில் நடத்தக் கோரிய பாகிஸ்தான் கிரிக்கெட் சபை குறைந்தது நான்கு போட்டிகளையேனும் பாகிஸ்தானில் நடத்த வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளது.

ஆசிய கிண்ணத்தின் 13 போட்டிகளில் நான்கை மாத்திரம் பாகிஸ்தானில் நடத்தவும் இறுதிப் போட்டி உட்பட எஞ்சிய போட்டிகளை பாகிஸ்தானுக்கு வெளியே நடத்தவும் அந்நாட்டு கிரிக்கெட் சபை தலைவர் நஜாம் செதி பரிந்துரைத்துள்ளார்.

பாகிஸ்தானுக்கு வெளியில் நடத்தப்படும் போட்டிகள் ஐக்கிய அரபு இராச்சியத்தில் நடத்த வாய்ப்பு உள்ளது.

ஆசிய கிண்ணத்தை கலப்பு முறையில் நடத்த இலங்கை மற்றும் பங்களாதேஷ் கிரிக்கெட் சபைகள் எதிர்ப்பு தெரிவித்திருப்பதோடு இந்திய அணி பாகிஸ்தான் வர மறுப்புத் தெரிவித்திருக்கும் நிலையிலேயே நஜாம் செதி பி.பி.சிக்கு அளித்த பேட்டியில் இதனைத் தெரிவித்துள்ளார்.

ஆசிய கிண்ணத்தில் இந்தக் கலப்பு முறை வெற்றி அளித்தால் இந்த ஆண்டு இறுதியில் இந்தியாவில் நடைபெறவுள்ள ஒருநாள் உலகக் கிண்ண போட்டியில் அதனை பயன்படுத்த முடியும் என்று அவர் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

இந்தியாவுடனான அரசியல் பதற்றம் நீடிக்கும் நிலையில் பாகிஸ்தான் அணி இந்தியா பயணிப்பதற்கு பாகிஸ்தான் அரசு அனுமதி அளிப்பதற்கான சாத்தியம் குறைவாக இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்தப் பிரச்சினைக்கு தீர்வு காணும் முயற்சியாக செதி கடந்த செவ்வாயன்று (09) ஆசிய கிரிக்கெட் கௌன்சிலை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தி இருந்தார்.

“மூன்று நாட்களுக்கு முன் நான் முன்வைத்த முன்மொழிவில் அனைத்தும் பற்றி அவதானம் செலுத்தப்பட்டிருக்கிறது. நாம் பாகிஸ்தானில் நான்கு போட்டிகளில் ஆடுவோம். அணிகள் நேராக இங்கு வரும் பின்னர் அனைவரும் பொதுவான இடத்திற்கு செல்வார்கள். நாம் எஞ்சிய போட்டிகளை அங்கு விளையாடுவோம். போட்டியில் நாம் இறுதிப் போட்டிக்கு வந்து அது இந்தியா அல்லது எந்த அணியாக இருந்தாலும் பொது இடத்திலேயே நாம் ஆடுவோம் என்று நாம் விட்டுக்கொடுக்கிறோம். இந்த அனைத்து பிரச்சினைகளையும் தீர்க்க நாம் வளைந்து கொடுத்துள்ளோம்” என்று செதி குறிப்பிட்டார்.

ஒருநாள் போட்டியாக நடைபெறவுள்ள ஆசிய கிண்ணத் தொடரை வரும் செப்டெம்பர் மாதத்தில் நடத்த ஏற்பாடாகியுள்ளது.

# அக்கரைப்பற்று கல்வி வலய கரப்பந்தாட்டச் சுற்றுப்போட்டி

**அட்டாளைச்சேனை மத்திய நிருபர்**



அக்கரைப்பற்று வலயக் கல்வி அலுவலக விளையாட்டுப் பிரிவு நடாத்திய ஆண்களுக்கான கரப்பந்து சுற்றுப் போட்டி 16, 18 மற்றும் 20 வயதுப் பிரிவுகளில் வெற்றிகரமாக நடைபெற்றது.

அக்கரைப்பற்று வலயக் கல்விப் பணிப்பாளர் அஷ்ஷெய்க் ஏ.எம். றஹ்மத்துல்லாஹ்வின் வழிகாட்டலில், அக்கரைப்பற்று கல்வி வலய உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் எஸ்.எம். ஜெமீல், ஆசிரிய ஆலோசகர் எம்.எச். ஹம்மாத் ஆகியோர் இச்சுற்றுப் போட்டியை ஏற்பாடு செய்திருந்தனர்.

அட்டாளைச்சேனை மற்றும் பாலமுனை பொது விளையாட்டு மைதானம், அட்டாளைச்சேனை ஸஹ்றா வித்தியாலய மைதானத்தில் அக்கரைப்பற்று, அட்டாளைச்சேனை, பொத்துவில் பிரதேச பாடசாலை அணிகளுக்கிடையில் இந்தப் போட்டி நடைபெற்றது.

இதில் 16 வயதுக்குட்பட்ட பிரிவில் அக்கரைப்பற்று பாயிஷா மகா வித்தியாலயமும் 18 வயதுக்குட்பட்ட பிரிவில் ஒலுவில் அல்–ஹம்றா மகா வித்தியாலயமும் 20 வயதுக்குட்பட்ட பிரிவில் அக்கரைப்பற்று முஸ்லிம் மத்திய கல்லூரியும் வெற்றியீட்டின.

# அதிவேக அரைச்சதம் பெற்று ஜய்ஸ்வால் ஐ.பி.எல் சாதனை



இந்திய பிரீமியர் லீக் வரலாற்றில் அதிவேக அரைச்சதம் பெற்று யஷாஸ்வி ஜய்ஸ்வால் புதிய சாதனை படைத்துள்ளார்.

கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணிக்கு எதிராக ஈடன் கார்டன் மைதானத்தில் கடந்த வியாழக்கிழமை (11) நடைபெற்ற போட்டியில் ராஜஸ்தான் ரோயல்ஸ் அணி சார்பில் ஜய்ஸ்வால் 13 பந்துகளில் 50 ஓட்டங்களை பெற்றார். இவரை விடவும் ஒரு பந்து கூடுதலாக பட் கம்மின்ஸ் மற்றும் கே.எல். ராகுல் பெற்ற அரைச்சதங்களே முந்தைய சாதனையாக இருந்தது.

இதில் கொல்கத்தா அணி நிர்ணயித்த 150 ஓட்ட வெற்றி இலக்கை துரத்திய ராஜஸ்தான் ரோயல்ஸ் அணிக்காக ஜய்ஸ்வால் மொத்தமாக 47 பந்துகளில் 12 பௌண்டரிகள் மற்றும் 5 சிக்ஸர்களுடன் ஆட்டமிழக்காது 98 ஓட்டங்களை பெற்றார். இதன்மூலம் ராஜஸ்தான் ரோயல்ஸ் 13.1 ஓவர்களில் ஒரு விக்கெட்டை மாத்திரம் இழந்து வெற்றியீட்டியது.

# இலங்கை மகளிர் தொடர் வெற்றி



பங்களாதேஷ் மகளிர் அணிக்கு எதிரான மூன்றாவது டி20 சர்வதேச போட்டியில் 44 ஓட்டங்களால் வெற்றியீட்டிய இலங்கை மகளிர் அணி மூன்று போட்டிகளைக் கொண்ட தொடரை 2–1 என கைப்பற்றியது.

கொழும்பு, எஸ்.எஸ்.சி மைதானத்தில் நேற்று (12) நடைபெற்ற மூன்றாவது மற்றும் இறுதி டி20 போட்டியில் நாணய சுழற்சியில் வென்று முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை மகளிர் அணி 20 ஓவர்களுக்கும் 3 விக்கெட்டுகளை இழந்து 158 ஓட்டங்களை பெற்றது.

நிலக்ஷி டி சில்வா அதிரடியாக 39 பந்துகளில் 4 பௌண்டரிகள் மற்றும் 4 சிக்ஸர்களுடன் ஆட்டமிழக்காது 63 ஓட்டங்களை பெற்றதோடு ஹர்ஷிதா சமரவிக்ரம 42 பந்துகளில் ஆட்டமிழக்காது 51 ஓட்டங்களை பெற்றார். இருவரும் இணைந்து பிரிக்கப்படாத இணைப்பாட்டமாக 102 ஓட்டங்களை பெற்றனர்.

அணித்தலைவி சாமரி அத்தபத்து 23 பந்துகளில் 32 ஓட்டங்களை விளாசினார்.

இந்நிலையில் பதிலெடுத்தாட வந்த பங்களாதேஷ் அணி முக்கிய தருணங்களில் விக்கெட்டுகளை பறிகொடுத்தது. மத்திய வரிசையில் வந்த சோபான மஸ்டாரி மற்றும் அணித் தலைவர் நிகார் சுல்தான் ஓட்டங்களை அதிகரிக்க முயன்றபோதும் இருவரும் முறையே 30, 31 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தனர்.

இதனால் 20 ஓவர்கள் முடிவில் பங்களாதேஷ் மகளிர் அணி 7 விக்கெட்டுகளை இழந்து 114 ஓட்டங்களையே பெற்றது.

# சர்வதேச விளையாட்டுச் சங்கங்களுடன் பேசுவதற்கு நான்கு பேர் கொண்ட குழு நியமனம்

## பி.ஃபா, ஐ.சி.சி உடனான பேச்சுவார்த்தை ஆரம்பம்



சர்வதேச கிரிக்கெட் சங்கங்களுடனான பேச்சுவார்த்தையை நடத்துவதற்கு நான்கு பேர் கொண்ட குழு ஒன்றை விளையாட்டு அமைச்சர் ரொஷான் ரணசிங்க நியமித்துள்ளார்.

அந்தக் குழுவின் தலைவராக முன்னாள் கிரிக்கெட் வீரர் சிதத் வெத்தமுனி நியமிக்கப்பட்டிருப்பதோடு, முன்னாள் கிரிக்கெட் வீரரும் முன்னாள் தேர்வுக் குழு தலைவருமான அசந்த டி மெல், தேசிய விளையாட்டுச் சபையின் முன்னாள் உறுப்பினர், விளையாட்டு அமைச்சின் முன்னாள் ஆலோசகர் மற்றும் சிரேஷ்ட சட்டத்தரணி பண்டுக்க கீர்த்தினந்த, சட்டத்தரணி டினால் பிலிப்ஸ் ஆகியோர் அங்கத்தவர்களாக செயற்படுகின்றனர்.

இந்தக் குழு தற்போது பிரச்சினை நீடிக்கும் இலங்கை கிரிக்கெட் சபையின் தாய் நிறுவனமான சர்வதேச கிரிக்கெட் கௌன்சில் (ஐ.சி.சி) மற்றும் இலங்கை கால்பந்து சம்மேளனத்தின் தாய் நிறுவனமான சர்வதேச கால்பந்து சம்மேளனத்துடன் (பிஃபா) பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்திருப்பதாக கூறப்பட்டுள்ளது.

இதனிடையே, இலங்கை வருகை தந்திருக்கும் ஐ.சி.சி துணைத் தலைவர் இம்ரான் க்வாஜாவுடன் இலங்கை கிரிக்கெட்டில் ஏற்பட்டிருக்கும் தற்போதையபிரச்சினைதொடர்பில்இந்தக் குழு கடந்த வியாழக்கிழமை (11) பேச்சுவார்த்தை நடத்தியுள்ளது. இதற்கு விளையாட்டுத் துறை அமைச்சர் ரொஷான் ரணசிங்கவும் இணைந்துள்ளார்.

இந்தக் குழு எதிர்காலத்தில் சர்வதேச ஒலிம்பிக் குழு, சர்வதேச ரக்பி சம்மேளனம், சர்வதேச மெய்வல்லுனர் சம்மேளனம் போன்ற இந்நாட்டின் தேசிய விளையாட்டு சங்கங்களின் தாய் நிறுவனம் மற்றும் சம்மேளனங்களுடன் பேச்சுவார்த்தை நடத்த திட்டமிட்டுள்ளது.

குறிப்பாக தற்போது 1973 இன் 25 ஆம் இலக்க விளையாட்டு சட்டத்திற்கு பதில் புதிய சட்டம் ஒன்றை தயாரித்தல், இந்நாட்டு விளையாட்டு சங்கங்களின் சிக்கல்கள், இந்நாட்டு விளையாட்டு சங்கங்கள் சர்வதேச விளையாட்டு சங்கங்களுக்கு வழங்கி இருக்கும் பொய்யான தகவல்கள் மற்றும் விளையாட்டு அமைச்சு மற்றும் சர்வதேச விளையாட்டு சங்கங்கள் இடையே புரிந்துணர்வு ஒன்றை அதிகரிப்பது போன்ற விடயங்கள் தொடர்பில் அவதானம் செலுத்தப்படும் எனவும் விளையாட்டு அமைச்சு வட்டாரங்கள் குறிப்பிட்டுள்ளன.

# ஒருநாள் தரவரிசையில் ஆப்கானிடம் சரிந்து இலங்கை ஒன்பதாவது இடம்



சர்வதேச கிரிக்கெட் கௌன்சிலின் ஒருநாள் தரவரிசையில் இலங்கை அணி ஒரு இடம் சரிந்து 9 ஆவது இடத்திற்கு பின்தள்ளப்பட்டிருப்பதோடு அவுஸ்திரேலியா முதலிடத்தை தக்க வைத்துக் கொண்டுள்ளது.

ஐ.சி.சி தரவரிசையில் 2019–20 பருவத்தின் போட்டி முடிவுகள் நீக்கப்பட்டு 2020 மே தொடக்கம் இடம்பெற்ற போட்டி முடிவுகள் அடிப்படையில் புதுப்பிக்கப்பட்ட ஐ.சி.சி தரவரிசை கடந்த வியாழக்கிழமை (11) வெளியிடப்பட்டது.

இதில் இலங்கை அணி ஒரு புள்ளி குறைக்கப்பட்டு 8 ஆவது இடத்தில் இருந்து 9 ஆவது இடத்திற்கு பின்னடைவை சந்தித்துள்ளது. பதிலாக ஆப்கானிஸ்தான் அணி 2 இடங்கள் முன்னேற்றம் கண்டு 8ஆவது இடத்தைப் பிடித்துள்ளது.

ஐந்து முறை உலக சம்பியனான அவுஸ்திரேலியா 113 புள்ளிகளில் இருந்து 118 புள்ளிகளாக முன்னேற்றம் கண்டு தரவரிசையில் முதல் இடத்தை தக்கவைத்தது. ஒரு புள்ளி மேலதிகமாகப் பெற்று 116 புள்ளிகளுடன் பாகிஸ்தான் அணி இரண்டாவது இடத்திற்கு முன்னேறியதோடு இரண்டாவது இடத்தில் இருந்த இந்தியா மூன்றாவது இடத்திற்கு சரிந்தது.

நியூசிலாந்து அணி நான்காவது இடத்தை பிடித்தபோதும் அது இந்தியாவை விடவும் 11 புள்ளிகள் பின்தங்கி உள்ளது. இந்தியாவில் இந்த ஆண்டு இறுதியில் நடைபெறவுள்ள உலகக் கிண்ணத்தில் நடப்புச் சம்பியன் பட்டத்தை தக்கவைக்க போராடவிருக்கும் இங்கிலாந்து அணி 10 புள்ளிகளை இழந்து ஐந்தாவது இடத்திற்கு சரிந்துள்ளது.

தென்னாபிரிக்கா மற்றும் பங்களாதேஷ் அணிகள் முறையே ஆறு மற்றும் ஏழாவது இடங்களை தக்கவைத்துக் கொண்டுள்ளன. இந்தப் புள்ளிப் பட்டியலில் முதல் எட்டு இடங்களை பிடித்திருக்கும் அணிகளே உலகக் கிண்ணத்திற்கு நேரடி தகுதி பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# உலகக் கிண்ண தகுதிகாண் போட்டிக்கு வலுவான மேற்கிந்திய குழாம் அறிவிப்பு



சிம்பாப்வேயில் வரும் ஜூன் 18 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள உலகக் கிண்ண தகுதிகாண் போட்டிக்கு மேற்கிந்திய தீவுகள் வலுவான 15 பேர் கொண்ட குழாத்தை அறிவித்துள்ளது.

இந்த ஆண்டு இறுதியில் இந்தியாவில் நடைபெறவுள்ள ஒருநாள் உலகக் கிண்ண போட்டிக்கு தகுதி பெறுவதற்காக நடைபெறும் இந்தத் தொடரில் இலங்கை உட்பட எட்டு அணிகள் பங்கேற்கவுள்ளன. இதில் முதல் இரு இடங்களைப் பிடிக்கும் அணிகளே உலகக் கிண்ணத்திற்கு தகுதி பெறும்.

இந்தத் தகுதிகாண் போட்டிக்கு முன்னதாக அதற்கு தயாராகும் வகையில் மேற்கிந்திய தீவுகள் அணி ஷார்ஜாவில் எதிர்வரும் ஜூன் 5, 7 மற்றும் 9 ஆம் திகதிகளில் ஐக்கிய அரபு இராச்சியத்துடன் மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் ஆடவுள்ளது. இந்நிலையில் சகலதுறை வீரர் கீமோ போல் மற்றும் இடது கை சுழற்பந்து வீச்சாளர் குடகேஷ் மோட்டி அணிக்கு அழைக்கப்பட்டுள்ளனர். இந்த இருவரும் கடைசியாக இந்தியாவுக்கு எதிராக கடந்த ஜூலையில் டிரினிடாட்டில் நடந்த ஒருநாள் போட்டியிலேயே ஆடி இருந்தனர். இதில் இந்திய பிரீமியர் லீக்கில் ஆடும் வீரர்கள் நாடு திரும்பிய பின் சிம்பாப்வே தொடருக்கு பங்கேற்க முன்னதாக தமது குடும்பத்தினருடன் சிறிது காலம் செலவிட மேற்கிந்திய கிரிக்கெட் சபை அனுமதி அளித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

**மேற்கிந்திய தீவுகள் குழாம்:** ஷாய் ஹோப் (தலைவர்), ரோவ்மான் பொவெல் (உப தலைவர்), ஷமர் ப்ரூக்ஸ், யன்னிக் கரியா, கீசி கார்ட்டி, ரொஸ்டன் சஸ், ஜேசன் ஹோல்டர், அகீல் ஹொஸைன், அல்சரி ஜோசப், பிரண்டன் கிங், கைல் மேயர்ஸ், குடகேஷ் மோட்டி, கிமோ போல், நிகொலஸ் பூரன், ரொமாரியோ ஷெபார்ட்.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2023 மே மாதம் 13ம் திகதி சனிக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.